Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 01 புதன்கிழமை (17.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 351

# யுத்தத்திற்கு பிந்திய சவால்களை வெற்றிகரமாக சமாளிக்கும் இலங்கை

## சீன ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற
யுத்தம் முடிவிற்கு கொண்டு
வரப்பட்ட பின்னர் எதிர்நோக்
கிய சவால்களை சமாளிப்பதில்
இலங்கை குறிப்பிடத்தக்களவு
முன்னேற்றங்களை எட்டியுள்ள
தாக சீன ஜனாதிபதி பாராட்டி
யுள்ளார்.

இரண்டுநாள் விஜயமாக
நேற்றையதினம் இலங்கைக்கு
வருகை தந்த சீன ஜனாதிபதி
ஜி. ஜின்பிங்கிற்கும் ஜனாதிபதி
மகிந்த ராஜபக்ஷவிற்குமிடை
யில் இடம்பெற்ற சந்திப்பின்
பின்னர் வெளியிடப்பட்ட அறிக்
கையிலேயே இவ்வாறு தெரி
விக்கப்பட்டுள்ளது. இது
தொடர்பாக அந்த அறிக்கையில்
மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள
தாவது,

யுத்தத்திற்குப் பின்னரான
சவால்களை சமாளிப்பதில்
இலங்கை எட்டியுள்ள குறிப்பிடத்
தக்க முன்னேற்றங்களை சீனா
பாராட்டியுள்ளது. நல்லி ணக்க
ஆணைக்குழுவின் பரிந்துரை
களை நடைமுறைப்படுத்துவ
தில் காணப்பட்ட முன்னேற்றத்
தையும் அந்த நாடு பாராட்டி
உள்ளது. மேலும் இலங்கையில்
காணாமற் போனோர் தொடர்
பான விசாரணைகளை நடத்தும்
ஜனாதிபதி ஆணைக்குழுவிற்
கான ஆணை விஸ்தரிக்கப்பட்ட
தையும் அந்த நாடு வரவேற்
றுள்ளது. சீன ஜனாதிபதி ஜி
ஜின்பிங்கிற்கும் இலங்கை ஜனா
திபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு
மிடையே இடம்பெற்ற சந்திப்
பின் பின்னர் வெளியிடப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க



## முதல்வர் விக்கியின் செயற்பாடு வடமாகாண மக்களே பாதிப்பு

### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சரின்
நடவடிக்கைகளினால் வடக்கு
மக்களே பாதிக்கப்படுவதாக பாது
காப்புச் செயலாளர் கோத்தா
பய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
நேற்றையதினம் யு.எஸ். ஹபி
ராற் நிகழ்வில் கலந்து கொண்டு
உரையாற்றும் போதே அவர்
இவ்வாறு தெரிவித்தார். அங்கு
அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு முதல
மைச்சர் சி.வி. விக்
னேஸ்வரன அரசாங்
கத்தின் அபிவிருத்தித் திட்
டங்களுக்கு ஒத்துழைப்ப
தில்லை. இதனால் மக்களே
பாதிக்கப்படுவர்.

நாட்டின் ஏனைய மாகாணங்
களை விடவும் வடக்கு மாகா
ணசபை வித்தியாசமான நிலை
யில் காணப்படுகின்றது.

நாட்டில் துரித கதியில் நகர
அபிவிருத்திப் பணிகள் மேற்
கொள்ளப்பட்டு வருகின்றன.

2020ஆம் ஆண்டளவில் நாட்
டின் மொத்த சனத்தொகையில்
50 வீதமான மக்கள் நகரங்களில்
வாழ்வார்கள் என அவர் மேலும்
குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள், மின் கட்டணம் நள்ளிரவு முதல் குறைப்பு

பெற்றோல் லீற்றருக்கு 5 ரூபாவாலும் டீசல் லீற்றருக்கு 3 ரூபாவாலும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 20 ரூபாவாலும் மின்சாரக் கட்டணம் 25 சதவீதத்தினாலும் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த சீன ஜனாதிபதியுடன் இணைந்து நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் மூன்றாவது தொகுதியை நேற்றையதினம் திறந்துவைத்த பின்னரே ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

## 13ஆவது திருத்தச்சட்டம் அமுல் இந்திய நிலைப்பாடு மாறாது

### சையது அக்பருதீன் தெரிவிப்பு



13ஆவது திருத்தத்தை
இலங்கை அரசு முழுமை
யாக நடைமுறைப்படுத்த
வேண்டும் என்ற இந்தியா
வின் நிலைப்பாட்டில்
எவ்வித மாற்றமும் இல்லை
யென இந்திய வெளியுற
வுத்துறை அமைச்சு தெரிவித்
துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜ
பக்ஷ அண்மையில் ஊட
கங்களுக்கு அளித்த பேட்
டியில், இலங்கை அரச
மைப்புச் சட்டத்தின் 13ஆவது
திருத்தத்தை அப்படியே
முழுமையாக நடைமுறைப்
படுத்துவது சாத்தியமற்றது
என்று கூறியிருந்தார். இது
குறித்து புதுடில்லியில் நேற்று
முன்தினம் செய்தியாளர்கள்
கேட்டதற்கு வெளியுறவுத்
துறை அமைச்சின் செய்தித்
தொடர்பாளர் சையது அக்பரு
தீன் கூறியதாவது,

இலங்கையில் 13ஆவது

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தக்குற்ற விசாரணை நடாத்த கோரிய முதல்நாடு இஸ்ரேல்

### என்கிறது தேசிய சூரா பேரவை

இலங்கைக்கு எதிராக யுத்
தக் குற்றச் செயல் விசாரணை
களை நடத்துமாறு கோரிய
முதல் நாடு இஸ்ரேல் என
தேசிய சூரா பேரவை தெரி
வித்துள்ளது.

இஸ்ரேலிய தாக்குதல்
களினால் பாதிக்கப்பட்ட பலஸ்
தீன மக்களுக்கு இலங்கை
அரசாங்கம் ஒரு மில்லியன்
டொலர் உதவிகளை வழங்கி
யமை பாராட்டுக்குரியது
என தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுடன் பேணப்
பட்டு வரும் சகல இராஜ
தந்திர உறவுகளையும் துண்டிக்குமாறு தேசிய
சூரா பேரவை வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற தேசிய சூரா
பேரவையின் பொதுச் சபைக் கூட்டத்தில், பலஸ்
தீனத்திற்கு நிதி உதவி வழங்கிய ஜனாதிபதிக்கு
நன்றி பாராட்டுவதென் தீர்மானம் நிறைவேற்
றப்பட்டது. இஸ்ரேலிய படையினர் நடத்தி வரும்
தாக்குதல்களினால்

19 ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு பிள்ளைகளின் தாய் சாட்டிக்கடலில் சடலமாக மீட்பு

2 பிள்ளைகளின் தாயொருவர் வேலணை சாட்டி கடலில் இருந்து சடலமாக நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

யாழ். பண்டத்தரிப்பு சில்லாலை பகுதியைச் சேர்ந்த அன்ரனி லொறிற்றா (வயது-45) என்ற 2 பிள்ளைகளின் தாயாரே சடலமாக கண்டெடுக்கப்பட்டவராவார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## யானையுடன் மோதியது ஹயஸ் மாங்குளத்தில் இருவர் உயிரிழப்பு

ஹயஸ் வாகனம் யானையுடன் மோதி
விபத்துக்குள்ளானதில் இருவர் உயி
ரிழந்துள்ளதுடன், மூவர் படுகாயமடைந்
தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணி
யளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்
பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ்
வாகனமே மாங்குளம் பனிக்கன்குளப்
பகுதியில் இவ்வாறு மோதி விபத்துக்
குள்ளானது.

இந்த விபத்தில், மல்லாகம் பகுதி
யைச் சேர்ந்த அபிமன்னசிங்கம் மாணிக்க
சோதி (வயது-76) மற்றும் செல்லத்துரை
செல்வகுமார்(வயது-70) ஆகிய

19 ஆம் பக்கம் பார்க்க




## ஜனாதிபதி மகிந்த கிளிநொச்சிக்கு விஜயம்

ஜனாதிபதி மகிந்த ராஜ
பக்ஷ எதிர்வரும் ஒக்ரோ
பர் 12 ஆம் திகதி கிளி
நொச்சிக்கு விஜயம் செய்
யவுள்ளதாக கிளிநொச்சி
மாவட்டச் செயலகம் தெரி
வித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்
டத்தில் புதிதாக அமைக்
கப்பட்டுள்ள மாவட்டச் செய
லகத்தினை திறந்து வைப்
பதற்காகவே ஜனாதிபதி
கிளிநொச்சிக்கு விஜயம்
செய்யவுள்ளதாக தெரிவிக்

19 ஆம் பக்கம் பார்க்க



# வேலைதேடும் இளைஞர்களுக்கு வாய்ப்பு; உடன் பதிவு செய்யக்கோரிக்கை

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் அவர்கள் வசிக்கும் பிரதேச செயலகங்களில் கடமை புரிகின்ற மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு, யாழ். மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் தொழிற் சந்தை நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் நடைபெறவுள்ளது.

இந்த தொழிற்சந்தை நிகழ்வில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காகவே பதிவுகள் மேற்கொள்ளுமாறு கேட்கப்படுவதுடன், பதிவுகளை மேற்கொள்வோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், முன்னர் பதிவு செய்து, இதுவரையில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளாதவர்களும் தங்கள் பதிவுகளை புதுப்பித்துக்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வவுனியாவில் இரத்ததான முகாம்



வவுனியாவில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை நடைபெற்றது.

பகவான் ஸ்ரீ சத்யசாயியின் பக்தர்கள், பொதுமக்கள் இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் தொடர்ச்சியாக பல சமூக அமைப்புக்கள், சாரணர் சமூகம், தனியார் நிறுவனங்கள், பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், கல்வி நிறுவனங்கள் இரத்ததான நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது. (70)

# 'மண்வாசனை' நூல் வெளியீடு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் எழுத்தாளர் காசி.மணியம் (பாலேஸ்வரன்) எழுதிய 'மண்வாசனை' என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கண்டாவளைப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும், கண்டாவளை பிரதேச தலைவருமான க.முகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்நூலினை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

நிகழ்விற்கான வரவேற்புரையினை எழுத்தாளர் செ.ஆறுமுகம் நிகழ்த்த வெளியீட்டுரையினை கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.பிரபாகரன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நூலிற்கான விமர்சன உரையினை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (70)

# மாதா சொரூபம் விசமிகளால் சேதம்

(ஏழாலை)

ஏழாலை மேற்கு பகுதியில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த சிறிய மாதா சொரூபம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் சிலரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

கடையொன்றில் சுவருடன் அமைக்கப்பட்டிருந்த மாதா சொரூபமே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துடன் நேற்றைய தினம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தங்களுக்கு இது தொடர்பில் முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர்.

# ஓவியக் கண்காட்சி யாழ்.நகரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களை உள்ளடக்கிய ஓவியக் கண்காட்சி வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

இந்தக் கண்காட்சி தொடர்பில் யாழ். கூட்டுறவுச் சபை செயலாளர் செ.வேதவல்லி தெரிவிக்கையில்,

யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள 82 பாடசாலை மாணவர்களிடையே 6 பிரிவுகளாக ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

யூலை 15ஆம் திகதி தொடக்கம் யூலை 30ஆம் திகதி வரை இந்தப் போட்டி இடம்பெற்றது.

இதில் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 650 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வருகின்ற 20ஆம் திகதி நடைபெறவுள்ள 92ஆவது கூட்டுறவு தின விழாவில் தேர்வு செய்யப்பட்ட ஓவியங்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், இக் கண்காட்சி நாளை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும் என்று அவர் மேலும் கூறினார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு




யாழ். பல்கலைக்கழக கலைபீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழககலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12.00 மணி முதல் சுமார் ஒரு மணிநேரம் இந்த வகுப்பு பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பொறியியல். அரசியல் துறை. திட்டமிடல் போன்ற பாடங்களைக் கற்று சராசரி 3 புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் அந்தந்த முறைக்குள் செல்ல முடியாமையினால், சராசரி 3 புள்ளிகளை உடைய தமக்கு அந்தந்தத் துறைகளுக்குள் பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கான அனுமதி தருமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திட்டமிடல் மற்றும் அரசியல் துறை. பொருளியல் போன்ற பாடங்களை கற்கும் 640 மாணவர்களில் சுமார் 40 மாணவர்களையே உள்வாங்குகின்றார்கள்.

அதனால், ஏனைய மாணவர்கள் அந்தந்தத் துறைக்குள் செல்ல முடியாமல் இருப்பதனால், ஏனையவர்களையும் அந்தந்தத் துறைக்கும் செல்ல அனுமதி தருமாறும். அவ்வாறு அனுமதி தராதவிடத்து காலவரையறையற்ற வகுப்பு பகிஷ்கரிப்பினை மேற்கொள்ளவுள்ளதாகவும், கலைப்பீட மாணவர்கள் தெரிவித்தனர்.(25)

# வாகனச் சாரதி கைது

(வல்வெட்டித்துறை)

மதுபோதையில் உழவு இயந்திரத்தைச் செலுத்தி வந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அப்போது அவரிடம் வாகனத்துக்கான ஆவணம் எதுவும் இல்லையென பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (18)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



கிளிநொச்சி பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களிற்கு நேற்று இந்தியத் துணைத்தூதரகத்தினால் பாடசாலை புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்றுக் காலை 11.30 மணிக்கு குறித்த நிகழ்வு கல்லூரி முதல்வரின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது குறித்த பாடசாலையில் கல்விகற்கும் வறிய மாணவர்களிற்கு ஒரு தொகுதி புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் வடக்கு, கிழக்கிற்கான இந்தியத் துணைத்தூதரகத்தின் பதில் துணைத் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தலைமையிலான இந்திய தூதரகத்தை சேர்ந்த உயரதிகாரிகள், மற்றும் பா.உ சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்(29)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1092

திகதி 15.09.2014

வெற்றி எண்கள்: 03 07 16 37 — ஆங்கில எழுதது: Q

ஜக்பொட் பரிசு ரூ. 3,88,57,260/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,88,57,260/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 261 | 1,000/= | ரூ. 2,61,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 501 | 1,000/= | ரூ. 5,01,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11979 | 60/= | ரூ. 7,18,740/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6273 | 40/= | ரூ. 2,50,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 157554 | 20/= | ரூ. 31,51,080/= |
| ஆங்கில எழுத்து | 22756 | 20/= | ரூ. 4,55,120/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 80,37,860/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 39,165,540/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.18 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3797)

## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3800)

### காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி தெற்கில் 12 பரப்பு கலட்டிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0772718467

(C/3446)

# சட்டத்துறையில் மிளிரத்துடிக்கும் விழிப்புலன் இழந்த மாணவன்

(யாழ்ப்பாணம்)

விழிப்புலனிழந்த நிலையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திகளைப் பெற்ற வாழ்வக மாணவன் அ.தர்மன் தற்போது யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறையில் இணைந்து கல்விகற்று வருகின்றார்.

இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தனது கல்வியை மேற்கொண்டு உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டம் படித்து சட்டத்தரணியாவதற்கு இவர் யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை சென்றுள்ளார்.

மேலும் உயர்தரப்பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌவிக்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் இவரது நிலையைக் கேட்டறிந்து மும்பை வைத்தியசாலை ஒன்றில் இவருக்கான சிகிச்சையை மேற்கொள்ளும் பொருட்டு 12 இலட்சம் ரூபாவை ஆளுநர் நிதியிலிருந்து வழங்கியிருந்த போதிலும் அவருக்கான சிகிச்சை வெற்றியளிக்கவில்லை.

இவரது 10 ஆவது வயதில் பொக்கிழிப்பான் நோய் வந்ததன் காரணமாக அவரது இரண்டு கண்களும் பாதிக்கப்பட்டு பார்வையை இழந்துள்ள நிலையிலும் தனது விடாமுயற்சியினால் தொடர்ந்து படிப்பை மேற்கொண்டு 3 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(கரணவாய்)

நெல்லியடி 750 வீதி பகுதிகளில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வியாபார நிலையங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் இருக்கும் இடங்களைப் பார்வையிட்டு எச்சரிக்கை செய்ததுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளையும் மேற்கொண்டனர். (18)

# டெங்கு நோயின் தாக்கம் யாழில் மீண்டும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

அண்மை நாட்களில் டெங்கு நோய் தாக்கத்திற்கு இலக்கானோர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதன் காரணமாகவே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

16 நாட்களுக்குள் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய சுமார் 45 பேர் கிசிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் நேற்றுமுன்தினம் ஆறு பேரும் நேற்று நான்கு பேரும் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய தினம் கொக்குவில் தின்னவேலி, சிறுப்பிட்டி, நாயன்மார்கட்டு ஆகிய பகுதிகளில் இருந்தே நோயாளர்கள் நால்வர் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ்.மாவட்டப்பகுதியில் அதிகரித்துவரும் டெங்கு தொற்றில் இருந்து பாதுகாக்கப்பட்ட அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன் தமது சுற்றப்புறச் சுழல்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

92 ஆவது கூட்டுறவு தினவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் தீ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி கூட்டுறவு கைத்தொழில் சமூக நலத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி.மதுமதி வசந்தகுமார், மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளை முகாமையாளர் கே.சுசீந்திரன், யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (51)



# ஏமாற்றும் தலைவர்களும்… ஏமாளித் தமிழர்களும்…

வடபுலத்தான் எழுதுவது...

இனப்பிரச்சினையும் தமிழாக்களும் படுகிற பாட்டை நினைச்சால் சிரிப்புத்தான் வருகுது.

தமிழினத்தின் விடிவெள்ளிகள், தமிழீழத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் எண்டு எத்தினை பெரிய தலைவர்கள் வந்து பெரிய கதையெல்லாம் கதைத்தார்கள். விடுதலை எண்டார்கள். போராட்டம் எண்டார்கள். வீழ்ந்தாலும் மீண்டும் எழுவோம் எண்டார்கள்.

தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் தொடக்கம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வரையில எத்தினை சிங்கங்கள்.... எத்தினை புலிகள்....

எல்லாரும் பாராளுமன்றப் பதவிகளை அலங்கரிக்கிறதிலதான் பெரிய விருப்பத்தோட இருந்திச்சினம். இதில புலிகளின்ரை தலைவர் மட்டும் கொஞ்சம் விதிவிலக்கு.

ஆனால் அவரும் புத்தியைப் பயன்படுத்தி, போராட்டத்தை வெற்றியை நோக்கிக் கொண்டு செல்லாமல். மற்றவையின்ரை புத்திமதியைக் கேளாமல் தனிக்குதிரையோடி மாண்டு போனார்.

மற்றவையெல்லாம் நீதி மன்றத்தில பொய் சொல்லிறதைப்போல பாராளுமன்றத்திலயும் மக்கள் மன்றத்திலயும் வாய் கூசாமல் பொய் பேசி தங்கள் வாழ்நாளைக் கழித்தவர்கள்.

எந்த ஒரு தமிழ்த்தலைவரும் தமிழ்ச்சனங்களை எந்த ஒரு வகையிலும் ஈடேற்றிப்போட்டுச் சாகேல்ல.

எல்லாத் தமிழ்த்தலைவர்களும் தமிழ்ச்சனங்களை நடுத்தெருவில கைவிட்டிட்டுத்தான் செத்தவை.

ஆனால், தங்கட குடும்பங்களை மட்டும் அவை வலு கவனமாக முன்னேற்றிப் பாதுகாப்பாக வைச்சிட்டுத்தான் போனவை.

இப்பகூட இதுதான் கதை.

இதில ஒரு சின்ன மாற்றம் கூட இல்லை.

இவை கடந்த 60 வருசமாகக் கதைச்சுக் கொண்டிருக்கிற கதை கூட அதே பழைய – புளிச்சுப் போன கதைதான்.

ஆனால், இப்பிடியெல்லாம் செய்து செய்தே தமிழ்ச்சனங்களுக்குத் தலைவர்களாக இவை எப்பிடியோ வந்திடுகினை.

இதைப்பாக்கேக்க, எனக்கொரு கேள்வி எழும்.

இப்பிடிக் கெட்டித்தனமில்லாத ஆட்களையெல்லாம் எப்பிடித் தமிழ்ச்சனங்கள் தங்கட தலைவர்களாகத் தெரிவு செய்யினம் எண்டு... எனக்குப் புரியேல்ல.

ஒரு கெட்டித்தனமும் இல்லாத – உண்மையே பேசி அறியாத – ஆட்களை எல்லாம் தங்களின்ரை தலைவர்களாகத் தெரிவு செய்யிற சனங்களை நினைக்கக் கவலைதான் வருது.

இனவாதப் போதைக்கு கண்ணே இல்லை எண்டது கனபேருக்குத் தெரியிறதில்லை.

இனவாதத்தைக் கதைக்கிறவனே பெரிய ஆள் எண்டு நினைக்கிறது இதாலதான்.

இதாலதான் இனவாதத்தைப் பேசுவோரே இனப்பற்றாளர் எண்டு நினைக்கிற நிலை வளர்ந்திருக்கு.

இப்பிடி இனவாதத்தைப் பேசிப் பேசியே சனங்களுக்குப் போதையேற்றிவிட்டுத் தங்கட காரியங்களைப் பாக்கினம் எல்லாரும்.

இதில தமிழ்த்தலைவர்களுக்குப் போட்டியாகச் சிங்களத்தலைவர்கள் இருக்கினம். சிங்களத்தலைவர்களுக்குப் பதிலாக தமிழ்த்தலைவர்கள் இருக்கினம்.

ஆராக இருந்தாலும் அவையள் இந்த நாட்டுக்கும் அவை சார்ந்த சமூகங்களுக்கும் பிற சமூகங்களுக்கும் படு துரோகம் செய்யிறவை எண்டதை வரலாறு வலு துல்லியமாகக் காட்டிக்கொண்டிருக்குது.

ஆனால், இந்த வரலாற்றின்ரை வெளிப்படையான பாடத்தைப் படிக்கிறதுக்கு ஆரும் தயாரில்லை.

அதேவேளை இவை எல்லாம் ஒரு விசயத்தை வலு கவனமாகச் செய்யினம்.

சனங்களின்ரை நலன்களைப் பற்றிக் கதைக்கிறவையையும் சிந்திக்கிறவையையும் சனங்களின்ரை நலனுக்காக பாடுபடுகிறவையையும் துரோகிகள்..... இன விரோதிகள் எண்ட மாதிரி சனங்களுக்குக் காட்டப்பாக்கினம்.

இதுதான் பச்சைத் துரோகம் எண்டிறது.

இப்பிடியான போக்கு இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிற படியாலதான் இனப்பிரச்சினை இன்னும் தீராமல் எரியும் பிரச்சினையாகவே இருக்கு.

பச்சைப் புண்ணாக – சீழ்ப்பிடிச்ச காயமாக – இருக்கிற இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்கிறதுக்குப் பொருத்தமான மருத்துவம் என்ன எண்டு இன்னும் தமிழ்ச்சனங்களுக்குத் தெரியாது. பொருத்தமான மருத்துவர் யார் எண்டும் தெரியாமல் தடுமாறுது தமிழ்ச்சமூகம்.

இதாலதான் இன்னும் தமிழர்கள் தோற்றுக் கொண்டேயிருக்கினம். இன்னும் தமிழற்றை இனப்பிரச்சினை தீராப்பிரச்சினையாக இருக்கு. இந்தப் பழைய புண்ணைக் குணப்படுத்திறதுக்கு இன்னும் எத்தனை தலைமுறை வேணுமோ....!

ஆண்டாண்டு காலமும் அழுது புரண்டாலும் தமிழற்றை இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரவே வராது எண்டு நான் அடிச்சுச் சொல்லுவன்.

ஏனெண்டால்.... தமிழாக்களைப்போல கோமாளிகளும் தங்களுக்குப் பொருத்தமான தலை(வர்)களைத் தேர்வு செய்ய முடியாத ஏமாளிகளும் வேறு ஆருமில்லை.

வெற்றி நமது தவறுகளை மூடி மறைத்துவிடும். - முதுமொழி.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இயலாமையின் தொழில்முறை!

காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதடி என்ற கதையாகத்தான் எதுவும் சரிவராமலே நம் காலம் போய்க்கொண்டிருப்பது தெரிகிறது. வாய்ப்புகள் எதையும் பயன்படுத்திக் கொள்ளாமல் அல்லது வாய்ப்புகளை உருவாக்கும் சாதுரியத்தையோ காண்பிக்காமல் எந்த அதிசயத்துக்கு நாம் காத்திருக்கிறோம் என்பது புரியவில்லை.

“இந்த நாட்டு அரசுகள் ஒண்டையுந் தராது; இந்த நாட்டு ஆட்சியாளர்களுடன் பேசிச் சரிவராது” என்று பொத்தாம் பொதுவாக அடித்துக் கூறிவிட்டு காலத்தைக் கடத்திப் போய்க்கொண்டிருப்பது எந்தளவுக்குச் சரி? சர்வதேச அழுத்தம் இல்லாமலே இந்த நாட்டில் இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கப்பெற்ற முன்னுதாரணம் உண்டல்லவா?

இதுவரை காலமாக தமிழ் மக்களுக்குத் தலைமை வகித்து வந்தவர்களுக்கு யதார்த்தமுணர்ந்து பேசத் தெரியவில்லை; கோரிக்கைகளை வெல்லும் நியாயமான வழிமுறைகளைக் காணத் தெரியவில்லை; அதிகாரங்களைப் பகிர்ந்து வாழ்வதற்கான விருப்பத்தை உண்மையில் காண்பித்து அதற்கான மக்கள் போராட்ட வழிமுறைகளை உரிய முறையில் முன்னெடுத்திருக்கவில்லை என்பதுதான் உண்மையல்லவா?

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கத்தை நிறுத்திவைத்துச் சர்வதேச நாடுகள் கதறக் கதற மிரட்டப் போகின்றன என்றோ அமெரிக்காவின் கையில் இருக்கிறது இலங்கைக்கு ஆப்பு என்றோ அதையே ஓரே பார்வையாய் பார்த்தபடி காக்க வைத்திருப்பதே நம் அரசியலாக இருக்கிறது.

கடந்தகாலத் தவறுகளைத் தூக்கிப் பிடித்து, வெறுப்பைத் தூண்டி வளர்த்து, மக்களை ஆவேசத்தில் பொங்கவைத்துக் கொண்டிருப்பதே தமிழ்த் தலைவர்களுக்கும் தமிழ் ஊடகங்களுக்கும் தமிழ்ப் புத்திஜீவிகளுக்கும்(?) தெரிந்த ஒரே ராஜதந்திரமாக இருக்கிறது.

சுயநல நோக்குடன் பிறர் மீதான வெறுப்பையும், பிறருடன் சேர்ந்து வாழ முடியாமைக்கான நியாயங்களையும், மோதல்களையும் முன்னிலைப்படுத்துகிறவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி அறிவுஜீவிகளாக இருந்தாலும் சரி மானுட இழிவும் அவலமும் கஷ்டங்களும் அவர்களுக்குப் பொருட்டே அல்ல.

அவற்றைக் கொள்கைப்பிடிப்புக்குக் கீழ்ப்படுத்தியே சிந்திப்பார்கள். தங்களது வீம்பு, ரோச, பிளவு அரசியலின் மூலம் மக்கள் அழிந்தாலென்ன அவலங்களைச் சுமந்தாலென்ன வாழ்க்கை வசதிகளுக்கு ஏங்கி இருந்தாலென்ன... மக்கள் படும் அந்த இன்னல்களையே எதிரிக்கு எதிரான ஆயுதமாக மாற்றிக்கொள்ள முடியும் என்றுதான் அவர்கள் யோசிப்பார்கள்.

அதை எந்த மனசாட்சி உறுத்தலும் இல்லாமல் செய்ய இனக்குழு ரோசம் அவர்களை வழிநடத்தும். மக்கள் குருதி பெருக்குவதும், வீடிழந்து, தொழிலிழந்து, உருக்குலைந்து உலைவதும் ஏதோ ஒரு வீரக்கனவை இங்கு சாதிப்பதற்கான உரம் சேர்ப்பே என்று பிரசாரப்படுத்தவும் தயங்கார்.

எதிரிகளை உருவாக்கியபடியும், அதை பிரமாண்டப்படுத்திக் காட்டியபடியும் வெறுப்பை வளர்த்து பொருதிக்கொண்டிருப்பது வன்முறையின் வழிமுறை அல்லது அரசியல் இயலாமையின் தொழில்முறை.

மாறாக, பகைமறப்பும், நல்லிணக்கச் சூழலும் நமது மக்களுக்குத்தான் முதன்மைத்தேவை என்ற யதார்த்தத்தை உணர்தலும், நமக்கு வாய்த்திருப்பது நியாயங்களைப் பேசித்தீர்க்க முடியாத ஒரு எதிரி என்று பதவி லாப அரசியலுக்காக மிகைப்படுத்தும் புனைசுருட்டுகளைக் கைவிடுதலும், தீர்வுக்கான இணக்க நடைமுறைகளில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் சாதிப்பதே சமூகத்தைச் சிதைத்துவிடாது முன்னகர்த்தும் வழிமுறை.

தமிழ்த் தலைவர்களாகச் சொல்லிக்கொள்ள விரும்புவோரிடம் நாம் வேண்டுவது இதையே; கொந்தளிக்க வைக்கும் அவர்களது பேச்சுக்களை அல்ல.

- ஆசிரியர்

- நிறைவேற்று ஜனாதிபதியின் -

# அதிகாரங்கள் குறைக்கப்படாவிட்டால் அரசாங்கத்தை விட்டு விலக நேரிடும்

**- அச்சுறுத்துகிறது ஜாதிக ஹெல உறுமய**

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படாவிட்டால் அரசாங்கத்தை விட்டு விலக நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைக்கு உரிய பதிலளிக்கப்படாவிட்டால் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தமது யோசனைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படாவிட்டால் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் .

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கக் கோரும் தரப்பினர் கூட, எமது யோசனைத் திட்டங்களை ஏற்றுக் கொள்வார்கள்.

அதிகாரங்களை வரையறுப்பது தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற 5 பேர் பொலிஸாரால் கைது

நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவு பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் இரவு ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் மின்சார சபையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். நெல்லியடி பொலிஸ் பிரிவு பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவு பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மின்மானிக்குள் கம்பி வைத்தமை மற்றும் திருட்டு மின்சாரம் பெற்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களிலேயே மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## குற்றச்சாட்டில் உண்மையில்லை

- போக்குவரத்து ஆணைக்குழுத்தலைவர் தெரிவிப்பு -

(கொழும்பு)

தெற்கு அதிவேகப்பாதைக்கு அமைச்சரவை அனுமதி பெற்றே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக பெரேரா தெரிவித்தார்.

அவ்வாறின்றி எந்தக் காரணத்தைக் கொண்டும முறைகேடான வகையில் இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாத்தறை - கொழும்பு அதிவேகப்பாதையில் சேவையில் ஈடுபடும் ஏற்கனவே அனுமதிப்பத்திரம் உள்ளவர்களில் தகுதியானோருக்கே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சில பஸ் சங்கங்கள் கூறும் குற்றசசாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 9 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் கடந்த 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்களையும், எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின் குமார், நேற்று உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட 9 மீனவர்களில் ஒருவரான 15 வயது சிறுவனை, அச்சுவேலி அரச சான்று பெற்ற நன்னடத்தை பாடசாலையில் தொடர்ந்து தடுத்துவைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி அதிகாலை காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இராமநாதபுரம் பகுதியில் இருந்து இரண்டு படகுகளில் வந்த குறித்த மீனவர்களின் படகு ஒன்று கடலில் மூழ்கிய நிலையில், எஞ்சிய ஒரு படகுடன் மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனையடுத்து, ஊரகாவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த மீனவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே அவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## கண்சத்திரசிகிச்சை முகாம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோயினை குணப்படுத்தும் சத்திர சிகிச்சை முகாம் ஒக்ரோபர் மாதம நடுப்பகுதியில் மன்னாரில் நடைபெறவுள்ளதாக சுகாதார சேவை இயக்குநர் நாயகம் டாக்டர் பாலித்த மகிபால தெரிவித்தார்.

கொடிய யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சினால “விஷன் 2020” செயற்றிட்டத்தின் அடிப்படையில் கண்ணில் வெள்ளை படர்தல் நோயினை குணப்படுத்தும் சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலையில் 100 நோயாளிகளின் கண் வெள்ளை அகற்றபட்டு புதிய கண்வில்லைகள் பொருத்தப்பட்டன. இதற்கான சத்திர சிகிச்சைகள் சுகாதார சேவை இயக்குநர் நாயகம் டாக்டர் பாலித்த மகபால தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் நகரஅபிவிருத்தி கொழும்பில் பயிற்சிக்கருத்தரங்கு

நகர விரிவாக்கம் தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கொன்று நேற்றுக் காலை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஆரம்பமானது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஐ.நா மனித குடியிருப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆகியன இணைந்து இப்பயிற்சிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ விசேட அதிதியாக இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

இலங்கையின் நகர அபிவிருத்தி, குறிப்பாக கொழும்பை அண்மித்த நகர பிரதேசங்களில் நடத்தப்பட்டுவரும் அபிவிருத்திகள், குடியிருப்பு வசதிகள், நகரங்களை அழகாக்கும் செயற்பாடு என்பன தொடர்பில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமால் பெரேரா வரவேற்புரையாற்றினார். நகரவிரிவாக்கம், எண்ணக்கருவும் நனவாக்கலும் என்ற தலைப்பில் மொரட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் வில்லி மெண்டிஸ் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஐ.நா. ஹெபிடட் ஆசிய பசுபிக் பிராந்திய அலுவலகத்தின் சிரேஷ்ட மனித குடியிருப்பு அதிகாரி சிறிநிவாச பொபுரி, ஐ.நா. ஹெபிடட் தேசிய திட்ட முகாமையாளர் இந்து வீரசூரி உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சிறுவர்களுக்கு விற்கப்படும் ஐஸ்கிரீமில் சிறிது போதைப்பொருள் கலந்து விற்கப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். சிலகாலத்திற்குப் பின் போதையில்லா சுத்தமான ஐஸ்கிரீம் சிறுவர்களுக்கு பிடிக்காது, ஐஸ்கிரீம் இல்லாமல் இருக்கவும் முடியாது. ஏற்கனவே பேஸ்புக்கில் லைக் என்ற விருப்பத்தை பெறுவதே ஒரு ஈகோ–போதையாக நம்மில் பலரை அடிமைப்படுத்தியுள்ளது.**



# பயனர்களை ஆட்டுவிக்கும் ஃபேஸ்புக் அல்கரிதம்

மார்ட்டின்

பேஸ்புக்கில் நீங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக போடும் நிலைத்ததகவல்கள் அனைத்துமே உங்கள் நட்பு வட்டத்திலிருக்கும் அனைவரின் முகப்பக்கத்திலும் காட்டப்படுகிறதா என்பதையும் உங்கள் நண்பர்கள் அனைவருடைய நிலைத்ததகவல்கள் அனைத்துமே உங்கள் முகப்பக்கத்தில் காட்டுகிறதா என்பதையும் சோதித்துப் பார்த்திருக்கிறீர்களா?

வயர்ட் (Wired) இணையதளத்தை சேர்ந்த மாற் ஹோனன் (Mat Honan) என்ற பத்திரிகையாளர் சோதனை முயற்சியாக இரண்டு நாட்களுக்கு பேஸ்புக்கில் பிடித்தது, பிடிக்காதது என தான் பார்க்கும் அனைத்துக்குமே லைக் என்ற விருப்பத்தை தெரிவிப்பது என முடிவெடுத்து செயற்படுத்தியுள்ளார்.

நண்பர்களின் நிலைத்தகவலில் இருந்து செய்தி ஓடையில் வரும் தகவல்கள் மற்றும் விளம்பரங்கள் வரை அனைத்திற்கும் அவர் விருப்பம் (Like) தெரிவித்துள்ளார். சோதனையின் ஒரு நாள் முடிவிலேயே அவரது பேஸ்புக் பக்கம் அவருடைய நண்பர்களின் நிலைத்தகவல்கள் எதையுமே காட்டவில்லை, பக்கம் முழுவதுமே விளம்பரதாரர் மற்றும் செய்தி நிறுவனங்களின் தகவல்களால் நிரம்பி வழிந்துள்ளன.

இது மட்டுமல்ல இச்சோதனையின் மோசமான விளைவு மறுநாள் தெரியவந்தது. அவரது பக்கம் மட்டுமின்றி நண்பர்களின் பக்கத்திலும் கூட இவர் விருப்பம் தெரிவித்த விளம்பர மற்றும் செய்தி நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் ஆக்கிரமித்திருக்கின்றன. அவர்கள் "என்ன நடந்து விட்டது" என்று அவரை தொடர்பு கொண்டு விசாரிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

அதாவது நட்பு வட்டத்திலிருப்பவர்களு டன் பகிர்ந்து கொள்ள நீங்கள் பதியும் எல்லா நிலைத்தகவல்களும் உங்கள் நண்பர்களுடைய பக்கத்தில் காண்பிக்கப்படுவதில்லை என்பதையும் நட்பு வட்டத்திலிருப்பவர்கள் பகிர்ந்து கொள்ளும் நிலைத்தகவல்கள் அனைத்தும் உங்கள் பக்கத்தில் காட்டப்படுவதில்லை என்பதையும் ஒரு அதிதீவிர - லைக் போடும் சோதனையின் மூலம் நிரூபித்துள்ளார் மாற் ஹோனன்.

பேஸ்புக் உங்கள் முகப்பக்கத்தில் எதை காட்ட வேண்டும் என்பதை தீர்மானிக்க மென்பொருள் படிமுறையை (Algorithm) பயன்படுத்துகிறது. 2014 முதல் பேஸ்புக் செய்தி ஓடை என்ற புதிய வசதியை அறிமுகப்படுத்தியது. பேஸ்புக்கில் ஒருவர் விருப்பம் தெரிவிக்கும் தகவல்கள் மற்றும் இணையத்தில் ப்பார்க்கும் பக்கங்களின் அடிப்படையில் அவருடைய விருப்பத்தை கணக்கிடுவதன் அடிப்படையில் பிற விளம்பரதாரர் மற்றும் செய்தி நிறுவனங்களின் தகவல்கள் அச்செய்தி ஓடையில் காட்டப்படுகின்றன.

பேஸ்புக்கின் அல்கரிதம் ஒருவர் விருப்பம் தெரிவிக்கும் தனிநபர் நிலைத்தகவல்கள் மற்றும் இணையத்தில் பார்க்கும் பக்கங்களின் அடிப்படையில் அவருடைய ஆர்வத்தை அறிந்து அது சார்ந்த தகவல்களை, செய்திகளை, விளம்பரங்களை காட்டுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. நண்பர்களின் நிலைத்தகவல்களுக்கு மட்டும் நீங்கள் விருப்பம் தெரிவித்தாலும் கூட அவற்றில் உள்ள குறிச்சொற்களைக் கொண்டு அவை சார்ந்த செய்திகள் ஓடையில் காட்டப்படும்.

உதாரணமாக, ஏதோ ஒரு நண்பரின் மொக்கை நிலைத்தகவல்களுக்கு நீங்கள் தொடர்ச்சியாக விருப்பம் தெரிவித்து வருகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். கொஞ்சம் சீரியசாக பதிவிடும் நண்பரின் நிலைத்தகவல்களை நீங்கள் தொடர்ந்து கண்டுகொள்ளாமல் விட்டிருந்தால், அவர் தனது மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் உட்பட பதிவிடும் எந்த நிலைத்தகவலையும் உங்கள் பக்கத்தில் பேஸ்புக் காட்டாது.

மேலும், நாம் போடும் எல்லா நிலைத் தகவலும் நண்பர்களுக்கு காட்டப்படுகிறதா என்பதையும் நண்பர்களுடைய எல்லா நிலைத்தகவலும் நமக்கு காட்டப்படுகிறதா என்பதையும் அறிந்து கொள்ள எந்த வசதியும் பேஸ்புக்கில் இல்லை.

மேற்சொன்ன அல்கரிதத்தை பேஸ்புக் பயன்படுத்த வேண்டிய தேவையையும், அமெரிக்காவின் FTC போன்ற நெறிப்படுத்தும் அமைப்புகள் அதை கண்டுகொள்ளாமல் விடுவதன் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை, கருத்துக்களை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலமாக பேஸ்புக் வணிக ரீதியில் லாபங்களை ஈட்டி வருகிறது. பயனரின் பக்கத்தில் காட்டும் விளம்பரங்களும், பயனர் பற்றிய தகவல்களை விளம்பர நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்வதாலும் தான் பேஸ்புக் வணிக ரீதியில் வெற்றிகரமாக தொடர்கிறது. சுமார் 132 கோடிக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தும் பேஸ்புக்கின் மொத்த சந்தை மதிப்பு சுமார் ரூ. 12 லட்சம் கோடிக்கும் மேல்.

ஏற்கனவே பேஸ்புக் தனது பயனர்களின் உணர்ச்சிகளை (லைக்குகளை) வணிக நிறுவனங்களுக்கு விற்பது பற்றி அறிவோம்.

மேலும், பேஸ்புக் உள்ளிட்ட பல இணைய சேவை நிறுவனங்கள் தங்களது பயனர்களின் தகவல்களை அமெரிக்க உளவு நிறுவனமான தேசிய பாதுகாப்பு அமைப்பிடம் பகிர்ந்து கொள்வது எட்வேர்ட் ஸ்னோடன் வெளியிட்ட தரவுகளில் அம்பலமாகியிருக்கிறது.

எனவே உலகளாவிய தமது கண்காணிப்புக்கு உதவுவதாகவும், விளம்பர மற்றும் பங்குச் சந்தையில் பெரும் சக்தியாகவும் விளங்கும் பேஸ்புக்குக்கு எதிராக ஏதேனும் செய்துவிடுவார்களா என்ன?

அதையும் மீறி நெறிப்படுத்தும் விதிமுறைகளை விதித்து பேஸ்புக்கை சீர்செய்தால், பேஸ்புக் நீங்கள் விரும்பும் பேஸ்புக்காக இருக்காது. பேஸ்புக்கின் தற்போதைய பரபரப்பு, கிளர்ச்சி (Sensation), அவற்றுக்கான லைக்குகள் இதில் பழக்கப்பட்டுவிட்டவர்களுக்கு வரிசைக்கிரமமாக வரும் நண்பர்களின் நிலைத்தகவல்கள் அலுப்பை ஏற்படுத்தும்.

புரியும்படி சொன்னால், சிறுவர்களுக்கு விற்கப்படும் ஐஸ்கிரீமில் சிறிது போதைப் பொருள் கலந்து விற்கப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். சிலகாலத்திற்குப் பின் போதையில்லா சுத்தமான ஐஸ்கிரீம் சிறுவர்களுக்கு



பிடிக்காது, ஐஸ்கிரீம் இல்லாமல் இருக்கவும் முடியாது. ஏற்கனவே பேஸ்புக்கில் லைக் என்ற விருப்பத்தை பெறுவதே ஒரு ஈகோ-போதையாக நம்மில் பலரை அடிமைப்படுத்தியுள்ளது.

எனவே, பேஸ்புக்கை எதற்காக பயன்படுத்துகிறோம் என்று நாம் நினைப்பதற்கும் நடைமுறையில் பேஸ்புக் யாருக்கு பயன்படுகிறது என்பதற்கும் பாரிய இடைவெளி உள்ளது.

இன்றைய "நாகரீக" உலகில் நாம் மேலும் மேலும் தனித் தனித்தீவுகளாக பிரிந்து உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் சமூகத்திடம் பகிர்ந்து கொள்ளுவதற்கான வாய்ப்பை வெகுவாக இழந்து வருகிறோம். மெய் உலகில் சமூக உறவுகளைப் பேண இயலாதவர்களுக்கு மெய்நிகர் உலகு பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களின் மூலம் அந்த வாய்ப்பை வழங்குவதாக நாம் நினைக்கிறோம்.

பேஸ்புக்கின் பாதுகாப்பு அமைப்புகளை முழுமையாக பயன்படுத்தாததால் அல்லது புரிந்து கொள்ளாததால் இன்று வரை அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றன

பேஸ்புக்கில் ஒருவர் தனது குழந்தைப் பருவம் முதலான பழைய, புதிய நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள், உறவினர்கள் என தனக்கு பிடித்த, பிடிக்காத, ஒத்த கருத்துள்ள, எதிர் கருத்துள்ள அனைவரையும் தனது நட்பு வட்டத்தில் வைத்துக் கொண்டு உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற வகையில் பலர் பேஸ்புக்கை பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால், பேஸ்புக்கில் பகிர்ந்து கொள்ளப்படும் தனிநபரின் தகவல்கள், புகைப் படங்கள் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை விபரங்களை பகிரங்கப் படுத்துவதுடன், சமூக மற்றும் இணையக் குற்றங்கள் நடப்பதற்கு அடிப்படையாக அமைகின்றன. குறிப்பாக பேஸ்புக்கில் பகிர்ந்து கொள்ளப்படும் பெண்களின் படங்களை பாலியல் ரீதியில் தவறாக சித்தரித்து பதிவேற்றுவதில் ஆரம்பித்து கடும் மன உளைச்சலை கொடுக்கும் பல அத்துமீறல்கள் நடக்கின்றன.

பேஸ்புக் தனது பயனர்களின் அந்தரங்கத்தை பாதுகாப்பதற்கு, ஒவ்வொரு பயனரும் தான் பதிவிடும் ஒவ்வொரு நிலைத் தகவலையும் யார் யார் பார்க்கலாம் என்பதை மட்டுப்படுத்தும் வசதி, தங்களது தனிப்பட்ட விவரங்களையும் நிலைத்தகவல் ஓடைகளையும் (status feed) நட்பு வட்டத்தையும் முன் பின் அறியாதவர்கள் பார்க்க முடியாமல் மட்டுப்படுத்தும் வசதி, உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அமைப்புகளை (Privacy Settings) கொண்டு வந்தது.

ஆனால் பலரும் பேஸ்புக்கின் பாதுகாப்பு அமைப்புகளை முழுமையாக பயன்படுத்தாததால் அல்லது புரிந்து கொள்ளாததால் இன்று வரை அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றன. இந்த வகையான அத்துமீறல்களை மட்டுமே பெரும்பாலான பயனர்கள் பிரச்சினையாக கருதுகின்றனர்.

ஆனால், தனிநபர்கள் மட்டும் பேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை முறைகேடாக பயன்படுத்தவில்லை.

பேஸ்புக் நிறுவனமே தனது பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை திருடி விற்றுள்ளது.

பயனர்களின் தனித் தகவல்கள் பகிர்ந்து கொள்வதை மட்டுப்படுத்தும் அமைப்பை (Privacy Settings) அவர்களை அறியாமலேயே மாற்றுவதிலிருந்து தனிநபர் தகவல்களை விளம்பர நிறுவனங்களுடன் பகிர்ந்து கொண்டது வரை பல மீறல்கள் நடந்ததை அடுத்து 2011ஆம் ஆண்டு அமெரிக்காவின் மத்திய வர்த்தக ஆணையம் (FTC) தனிநபர் அந்தரங்கம் தொடர்பாக சில நெறிமுறைகளை நிர்ணயித்து அவற்றை பின்பற்றுமாறும் அவை பின்பற்றப்படுவதை கண்காணிக்க சுயாதீனமான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும் பேஸ்புக்கிற்கு உத்தரவிட்டது.

"என்ன செய்வது, திரும்பவும் புறா வழி தூது என்று மறுபடியும் கற்காலத்திற்கே சென்றுவிடலாமா" என்று அவர்கள் கேட்கலாம். இதற்கு பதிலளிக்கிறார் ஆஸ்திரியாவைச் சேர்ந்த சட்டக் கல்வி மாணவர் மக்ஸ் செரிம்ஸ்.

பேஸ்புக்கின் நடைமுறைகள் ஐரோப்பிய தகவல் பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதாக குற்றம் சுமத்தியுள்ள மக்ஸ் செரிம்ஸ், பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை பேஸ்புக் வேவு பார்த்ததாகவும், அவற்றை அமெரிக்க உளவு அமைப்பான என்.எஸ்.ஏ-வுக்கு தருவதாகவும், பயனர்களின் அந்தரங்க தகவல்களை வேவு பார்த்ததற்காக அந்நிறுவனம் பாதிக்கப்பட்ட பயனர்களுக்கு தலா ரூ. ஒரு லட்சம் நஷ்ட ஈடு தரவேண்டும் என்றும் வியன்னா நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

இந்த வழக்கில் பேஸ்புக்கால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களை இணைத்துக் கொள்ளவும், வழக்கிற்கு ஆதரவளிக்கவும் அவர் அழைப்பு விடுத்ததையடுத்து அவருக்கு பல்வேறு நாடுகளை சேர்ந்த 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேஸ்புக் பயனர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். மக்ஸ்சுக்கு பெருமளவில் ஆதரவு பெருகியிருப்பதால் இது தொடர்பாக பதில் அளிக்குமாறு பேஸ்புக் நிறுவனத்துக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தை விட்டு வெளியேற மாட்டேன்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன



(கொழும்பு)

ஆளும் கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற சிலர் சூழ்ச்சி செய்து வருகின்றனர் எனினும், இந்த முயற்சிகள் வெற்றியளிக்காது. நான் அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் செல்லப் போவதில்லை. என மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுனில் பிரேமசிங்கவினால் எழுதப்பட்ட சதஹஸ் செவனலி என்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிங்கள கடும்போக்காளர்கள் தேசத்துரோகி என குண்டு வீசினாலும், தமிழ் கடும்போக்காளர்கள் தேசப்பற்றாளர் என குண்டு வீசினாலும் நான் யார் என்பது எனக்கே இன்னும் தெரியாது.

எதற்காகவேனும் எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்றால் ஜனாதிபதி மாளிகையிலேயே எதிர்ப்பை வெளியிடுவேன். வெளியே வந்து எதிர்ப்பை வெளியிட மாட்டேன்.


முழுச் சமூகமுமே சீரழிந்துள்ள நிலையில். அரசியல்துறை மட்டும் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும் போது ஊழல் பேர் வழியாக அடையாளப்படுத்தப்படுவது பொதுவானதே.

எடுக்க வேண்டிய எந்தவொரு தீர்மானத்தையும் நான் வெளியில் இருந்து எடுக்கப் போவதில்லை. எல்லாத் தீர்மானங்களையும் அரசாங்கத்திற்கு உள்ளிருந்தே எடுப்பேன்.

இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை என்றார்.

# கடலுக்குள் துறைமுக நகரம் இன்று நிர்மாணப் பணிகள் ஆரம்பம்




காலிமுகத்திடலுக்கு அருகாமையில் 500 ஏக்கருக்கும் அதிகமான கடற்பகுதியை நிலப்பிரதேசமாக மாற்றி புதிய துறைமுக நகரம் நிர்மாணிக்கும் பணிகள் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஷீஜின்பின் ஆகியோரின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடற்பிரதேசத்தை நிலமாக்கி நகரமொன்று நிர்மாணிக்கப்படுகின்றமை இதுவே முதற் தடவையாகும்.

இப்புதிய துறைமுக நகரத்தின் முதற்கட்டப் பணிக்காக 1337 மில்லியன் அமெ. டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சைனா கொம்யூனிகேஷன் கன்ஸ்ட்ரகஷன் நிறுவனம் முதலீடு செய்யவுள்ளது.

நவீன வசதிகளுடன் கூடிய ஹோட்டல்கள்- உணவு விடுதிகள்- நீச்சல் குளங்கள் உட்பட விளையாட்டு வசதிகளுடன் கூடிய வகையில் நிர்மாணிக்கப்படவுள்ள இத்துறைமுக நகரத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய வீதித் தொகுதியும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

# தொடர்ச்சியான மகப்பேற்று விடுமுறை பணிகளைப் பாதிப்படையச் செய்யும்

## சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

அரச சேவையில் உள்ள பெண்கள், வரையறுக்கப்பட்ட மகப்பேறு விடுமுறைக்கு மேலதிகமாக விடுமுறையினை பெறக் கூடாது என சுகாதாரத் துறை அமைச்சர் மைத்திரிபால சிரிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இதனை தெரிவித்தார்.

'மகப்பேறு விடுமுறையினை தொடர்ச்சியா பெறுவதன் மூலம் அரச நிறுவனங்களின் பணிகள் பாதிப்படைவதாக அவர் குறிப்பிட்டார்.

வேதனத்துடனான மகப்பேறு விடுமுறையாக 84 நாட்களை முதல் கட்டமாக பெற முடியும்.

அதன் பின்னர் அரைவாசி வேதனத்துடன் 84 நாட்களும், வேதனம் எதுவும் இன்றி மேலும் 84 நாட்களும் 'விடுமுறையினை பெற முடியும்.

இதற்கு அமைய மொத்தமாக 252 நாட்கள் விடுமுறையினை கட்டம் கட்டமாக பெற முடியும் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு நிவாரணங்களை சீன ஜனாதிபதி எடுத்து வரவில்லை

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

சீன ஜனாதிபதி நிவாரணங்களை எடுத்து வரவில்லை பாரியளவிலான வட்டிக்கு சீன இலங்கைக்கு ஜனாதிபதி, கடன் வழங்கவுள்ளார். என ஐக்கிய தேசியக் கட்சியின், நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி இலங்கைக்கு பாரியளவில் உதவிகளையும் நிவாரணங்களையும் எடுத்து வருவதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்றது. எனினும், உண்மையான நிலைமை அதுவல்ல.

இந்தக் கடன் கல்வி, வறுமை ஒழிப்பு, கிராமிய வைத்திய சாலை அபிவிருத்தி உள்ளிட்ட நலன் திட்டங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

அதிவேக நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், கடலை நிரப்பி தீவுகள் அமைத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கே கடனுதவி வழங்கப்படுகின்றது.

இவ்வாறான கடன் தொகைகளையே அரசாங்கமும் விரும்புகின்றது.

இந்தக் கடன் தொகையானது இலகுக் கடன் அடிப்படையிலானதல்ல, அதிகளவு வட்டிக்கே இந்தக் கடன் பெற்றுக்கொள்ளப் படவுள்ளது.

நாட்டில் நிலவி வரும் வறட்சி காரணமாக மூன்று லட்சம் மக்களுக்கு குடிநீர் வசதியில்லை.

அரசாங்கம் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதனைத் தவிர வேறு எந்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்துவதில்லை.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசாங்கம் நாட்டம் காட்டுவதில்லை.

கடந்த காலங்களில் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் உதவிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன.



அரசாங்கங்கள் பேணிய வெளியுறவுக் கொள்கை மற்றும் வெளிநாடுகளுடனான நட்புறவின் அடிப்படையில் உதவிகள் கிடைக்கப்பெற்றன.

விக்டோரியா, ரந்தெனிகல உள்ளிட்ட நீர் மின் திட்டங்கள் உதவிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன என்றார்.

# சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சடலங்களாக மீட்பு

அநுராதபுரம் திஸா வாவியில் படகு கவிழ்ந்ததில் காணாமற்போன சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சடலங்கள் மீட்கபட்டுள்ளன.

காணாமற்போனவர்களின் சடலங்கள் நேற்று அதிகாலை பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவின்ரால் மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஐவர் நேற்று முன்தினம் மாலை திஸா வாவிக்கு சென்றிருந்தபோது, அவர்களில் மூவர் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இருவர் காணாமற்போயிருந்தனர்.

அனர்த்தத்திற்குள்ளான ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வெளிநாட்டில் கடன்பெற்று ஊவாவை அபிவிருத்தி செய்வோம்

## ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பரப்புரை



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் ஊவா மாகாணத்தின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு கடனுதவியை பெறவுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகியங்கனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதுவரை காலமாக ஊவா மாகாணத்தில் வெளிநாட்டு உதவிகள் பெற்றுக்கொ டுக்கப்படவில்லை. ஊவா மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாகம் ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும்.

ஹரின் பெர்னான்டோவை முதலமைச்சர் ஆக்குவதற்கு பொதுமக்கள் ஆணை வழங்கினால் வெளிநாட்டு உதவிகளின் மூலமாக ஊவா மாகாணத்தின் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தை எதிர்காலத்தில் தோற்றுவித்து யாராலும் முறியடிக்க முடியாத பணிகளை மேற்கொள்வோம்.

# சாதனைகள் படைக்கப்போகும் ஊவா மாகாணசபை தேர்தல்

## மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் பல்வேறு வகையிலும் சாதனை படைக்கப் போகின்றது. இலங்கையில் அதிகமாக அரச பலத்தைப் பிரயோகித்து நடாத்திய ஒரு தேர்தலாக இந்தத் தேர்தல் அமையவுள்ளது. என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் இந்தத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தை இழக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதி களத்தில் இறங்கி நேரடியாகப் பணியாற்றும் ஒரு தேர்தல் களமாக ஊவா மாறியுள்ளது. அபேட்சகர்கள் ஒரு பக்கம் இருக்க ஜனாதிபதி மக்களிடம் வாக்குக் கேட்கின்றார்.

அரசாங்கம் முன்னரே இந்தத் தேர்தலுக்காக தயாராகி மக்களுக்கு சேவை செய்திருந்தால் இவ்வளவு வன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கத் தேவையில்லை. பொருட்களை விநியோகித்திருக்க வேண்டியதில்லை. ஜனாதிபதி நேரடியாக தேர்தல சட்டங்களை மீறிச் செயற்படும் போது பொலிஸாரினால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தேர்தல் களத்தை இலக்கு வைத்து பல திறப்பு விழாக்களை அவர் ஏற்பாடு செய்துள்ளார். இது தேர்தல் சட்டத்துக்கு நேர் எதிரானது எனவும் தெரிவித்துள்ளார்.

# பிரதேசத்தின் அபிவிருத்தி மேம்பாடு

# மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு பகுதியினதும் அபிவிருத்தியையும் அரசியலையும் தூக்கிநிறுத்தக்கூடிய சக்தி ஒவ்வொரு சாதாரண குடிமகனதும் கையிலேயே தங்கியுள்ளது. இப்பகுதி மக்களது மிக முக்கிய பிரச்சினையாக நிரந்தர காணிகளும் வதிவிடங்களும் இல்லாமையினாலாகும் இது மிக வேதனையான விடையமாக உள்ளது. ஒவ்வொரு தனி மனிதனும் தனது வாழ்வியல் தேவை கருதி சிந்தித்து செயற்படுவானாகில் நிச்சயமாக தமிழ் மக்களது அரசியல் நீரோட்டத்தை மாற்றியமைக்க முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான ஜெகன் தெரிவித்தார்.


குடாநாட்டில் அபிவிருத்தியை வேண்டிநிற்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் அவர்களது வாழ்வாதாரத்திற்கு தடையாக இருக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் முகமாக சாவகச்சேரி நகர சபை சிற்றுழியர்களை உள்ளடக்கிய பகுதியான உதயசூரியன சனசமூக நிலையத்தில் மக்களுடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழர்கள் ஆயுத போராட்டத்தை தேர்ந்தெடுக்க வழிவகுத்த அன்றைய தமிழரசு கட்சியினர் தமது தேவைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டு இன்று தப்பித்துக்கொள்ள நினைக்கின்றனர். இவர்களது அரசியல் பிழைப்புகளுக்காக தமிழ் மக்கள் தவறான பாதை நோக்கி நகர்த்தப்பட்டு ஏமாற்றபட்டிருக்கின்றார்கள் என்பதுடன் மூன்று தசாப்த யுத்தத்துக்கு முகம் கொடுத்து சமூக, கலாசார, பொருளாதார ரீதியாக அதிகமான விலையை கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுமிருக்கின்றனர். இது தான் தமிழரது வரலாற்றுப் பதிவாகிவிட்டது.


இத்தனைக்கும் பொறுப்பு கூறவேண்டியது யார்? தமிழரது ராஜாக்கள் தாங்கள் தான் என்று வலம் வரும் இன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இவற்றுக்கான பொறுப்பை ஏற்பார்களா? இதற்காகத்தான் தமிழரது அரசியலில் மாற்றம் வரவேண்டும் என நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்தச் சந்திப்பில் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ்,



சமுர்த்தி உத்தியோகத்தர் செந்தூரன், கட்சி உறுப்பினர்களான மெடிஸ்கே, மூர்த்தி ஆகியோரும் நூற்றிற்கு மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட காந்திசிலை 3 மாதங்களாகியும் திறக்கப்படவில்லை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நவீன சந்தைக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட காந்தி சிலை 3 மாத காலமாக திறந்து வைக்கப்பட்டாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நகரசபையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நவீன சந்தைக்கு அருகில் முன்னர் இருந்த பீடத்தின் மீது மாற்றங்கள் செய்யப்பட்ட நிலையில் புதிதாக மகாத்மா காந்தியின் சிலை அமைக்கப்பட்டு 3 மாதங்கள் ஆன நிலையில் இன்னமும் திறப்பு விழா நடை பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் புதிதாக அமைக்கப்பட்ட இந்தச் சிலையில் பீடப் பகுதி சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனை சம்பந்தப்பட்டவர்கள் கண்டும் காணாததும் போல் இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(நி, 51)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு தினவிழாவையொட்டி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் ஆக்கங்கள் உள்ளடக்கிய கண்காட்சி நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

நேற்றுமுற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் ஆரம்பமாகிய இக் கண்காட்சி இன்று முற்பகல் 10 மணி முதல் 4 மணி வரை நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(51)



# தலைமைப் பயிற்றுநர் நியமனம் இம் மாத இறுதிக்குள்

(கொழும்பு)

இலங்கையணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக ஒருவரை இம்மாத இறுதிக்குள் நியமிக்க வேண்டுமென்வும் அவ்வாறு நியமிப்பதன் மூலம் நவம்பர் மாதத்தில் இலங்கை அணியின் இங்கிலாந்துடனான சுற்றுத் தொடரில் வெற்றிக்கான வாய்ப்புக் கிடைக்குமென இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் அஷேலி டி சில்வா தெரிவித்துள்ளார்.


மேலும் இலங்கை அணி இங்கிலாந்துடனான சுற்றுப்போட்டியில் எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி முதல் 07 சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும், அடுத்து நியூசிலாந்துடன் இடம்பெறவுள்ள போட்டிகளிலும் டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பங்குகொள்ளவுள்ளனர்.

பதவிக்கான விளம்பரங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற 15 விண்ணப்பப்படிவங்களிலிருந்து மிகவும் தகுதி வாய்ந்தவர்களாக 09 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்க்ளிலிருந்து ஒருவர் தலைமை பயிற்றுவிப்பாளராக தெரிவு செய்யப்படவுள்ளார், இவர்களுக்கான நேர்டி செவ்வி இணையத்தளத்தின் மூலம் இடம்பெற்று தகுதி வாய்ந்தவர் தேர்வு செய்யப்படுவார் என தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூடுதலாக இம்மாத இறுதியுடன் இவர்களுக்கான நேரடி பேட்டிகளை முடிக்க எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் இந்த 09 பேர்களின் பெயர்களில் இலங்கை அணி முன்னாள் வீரர் அத்தபத்துவின் பெயர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவன் அத்தபத்து இலங்கை அணியின் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மற்றும் பாகிஸ்தானுடனான சுற்றுப் போட்டியில் இடைக்கால பயிற்றுவிப்பாளராக பணியாற்றியதுடன் இலங்கை அணியின் வெற்றிகளுக்கு முன்ணனியாகவும் திகழ்ந்தவராவார்.

# இணக்கம் வெற்றியைத் தரும்

## கிரிக்கெட் சபைத் தலைவர், செயலருக்கு அமைச்சர் எடுத்துரைப்பு



(கொழும்பு)

2015 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளில் சம்பியனாவதை குறிக்கோளாகக் கொண்டு இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவரும் செயலாளரும் இணைந்து செயற்படவேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஜயந்த தர்மதாசவுக்கும் செயலாளர் நிஷான்த ரணதுங்கவுக்கும் இடையில் இடம்பெற்று வரும் கருத்து முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு இருவரையும் இரண்டாவது தடவையாக விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.


இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்துறை சார்ந்த விடயங்களில் அண்மைக்காலமாக நிலவிவரும் முரண்பாடுகள் காரணமாக தலைவருக்கும் செயலாளருக்கும் இடையிலும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாடுகளை நீக்கி 2015 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை மனத்தில் நிறுத்தி அவற்றில் வெற்றிபெறுவதற்கான திட்டங்களுடன் செயற்படுமாறு இருவரையும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்த கலந்துரையாடலின்போது அமைச்சரின் கோரிக்கைக்கு செவிமடுத்த கிரிக்கெட் சபைத் தலைவர் ஜயந்த தர்மதாசவும் செயலாளர் நிஷாந் ர்ணதுங்கவும் இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரிக்கெட்துறை சார்ந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும்போது இதுகாலவரை தலைவர் உட்பட நிறைவேற்றுக்குழுவினர் பின்பற்றி வந்த நடைமுறையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறு இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

எந்தவொரு தீர்மானமும் எடுக்கும்போது தலைவருக்கும் செயலாளருக்கும் இடையில் கருத்து பேதங்கள் ஏற்படாதவாறு மனந்திறந்து பேசித் தீர்மானங்களை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் எதிர்காலத்தில் பிரச்சினைகள் தலைதூக்காது என நம்புவதாகவும் தெரிவித்தார்.

2015 உலகக் கிண்ணத்தை சுவீகரிப்பதும் எதிர்கால கிரிக்கெட் துறையை வளர்ப்பதுமே கிரிக்கெட் சபையினதும் அதன் நிர்வாகிகளினதும் குறிக்கோளாக இருக்கவேண்டுமே தவிர வேறு விடயங்களை வெற்றிகொள்வதாக அமையக் கூடாது என்பதை உணர்த்தும் வகையில் தலைவரும் செயலாளரும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தினார்.

# எச்சரிக்கை



இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் கீத்ருவான் விதானகே இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான காலி டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் இரவு முழுமையாக தங்குமிடத்தைவிட்டு அனுமதியின்றி வெளியே சென்ற குற்றம், நேற்று முன்தினம் நடைபெற்ற ஒழுக்காற்று குழுவின் விசாரணையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்க்கு தண்டனையாக குறித்த போட்டியின் ஊதியம் முழுவதும் தண்டமாக அறவிடப்பட்டுள்ள அதேவேளை, கடுமையாக அவர் எச்சரிக்கப்பட்டு ஒரு வருட கண்காணிப்புக் காலமும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் இவர் கடுமையாக தண்டிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

விதானகே, 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குள் இது போன்ற அல்லது அணியின் சுமூக நிலைமைகளை குழப்பும் விதத்தில் நடந்து கொண்டால் உடனடியாக ஒரு வருட தடைக்கு உட்படுத்தப்படுவார். அவ்வாறே தீர்ப்பு வழங்கப்பட்டுளளது என இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கீத்ருவான் விதானகே இதற்கு முதல் பங்களாதேஷில் வைத்து, இங்கிலாந்து பயணத்தின் போதும் இவ்வாறு நடந்து கொண்டதாக இலங்கை அணியின் முகாமையாளர் ஏற்கனவே அறிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. காலி இரவு சம்பவத்திற்கு மன்னிப்பு கோரி ஈ மெயில் மூலம் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அனுப்பிய கடிதத்தில் தான் பௌத்த சமய வழிபாடான பிரீத் ஓதுதல் நிகழ்விற்கு சென்றதாக தெரிவித்திருந்த போதும் விசாரணைகளைத் தொடர்ந்து அவர் எங்கே சென்றார் என்ற தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

குறித்த சம்பவம் நடைபெற்ற நேரத்தில் சில ஊடகங்கள் இலங்கை கிரிக்கெட் அமைப்பின் பெண் செயலாளர் ஒருவருடன் விதான்கே பாலியல் உறவுக்காக வெளியில் சென்று இருக்கலாம் எனவும் சிரேஷ்ட வீரர்கள் இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

CHAMPIONS LEAGUE TWENTY 20

# முதன்மை சுற்று இன்று ஆரம்பம்

(ஹைதராபாத்)

சம்பியன்ஸ் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியின் முதன்மைச் சுற்று இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதில் 10 அணிகள் மோதவுள்ளன. 8 அணிகள் நேரடியாக இச்சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன.. தகுதிச் சுற்று மூலம் 2 அணிகள் நுழையும் இந்த 10 அணிகளும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் விபரம்:

ஏ பிரிவு: சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (ஐ.பி.எல். அணிகள்), பெர்த் ஸ்கோர்சேர்ஸ் (அவுஸ்ரேலியா), டொல்பின்ஸ் (தென்னாபிரிக்கா), குவாலி பையர்-1.

பி பிரிவு: கிங்ஸ் லெவன் பஞ்சாப், (ஐ.பி.எல். அணி), ஹோபர்ட் ஹூரிகேன்ஸ் (அவுஸ்ரேலியா) கேப் கோப்ரொஸ் (தென்னாபிரிக்கா), பார்படோஸ் டிரைடென்ஸ் (மே.தீவுகள்), குவாலி பையர்-2.

ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும். அரையிறுதி ஒக்ரோபர் 2ஆம் திகதியும், இறுதிப் போட்டி 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆரம்ப ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் 'கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன. ஹைதராபாத்தில் இரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டி ஏற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# களத்திற்கு வெளியில்...

பந்து வீச்சு தடையால் நான் நெருக்கடிக்கு உள்ளாகவில்லை. இது எனக்கு ஒரு தற்காலிக பின்னடைவு தான். இந்தப் பிரச்சினையில் இருந்து என்னால் விரைவில் விடுபட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. சுழற்பந்து வீச்சு ஜாம்பவனான சக்லைன் முஸ்தாக் உதவியுடன் எனது பந்து வீச்சில் உள்ள குறைபாடுகளை களைவேன். அதன் பின் உள்ளூர் போட்டியில் விளையாடுவேன். அடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவின் படி சர்வதேச கிரிக்கெட் சபை சோதனைக்கு செல்வேன். அடுத்த ஆண்டு (2015) நடைபெறும் ஒருநாள் உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு முன்பு சர்வதேச போட்டிக்கு திரும்புவேன்.

**சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்)**

விளையாட்டில் ஜாம்பவான்களாக விளங்கிய பீலே (கால்பந்து), மொகமட் அலி (குத்துச்சண்டை), மைக்கல் ஜோர்டான் (கூடைப்பந்து), கார்ல் லீவிஸ் (தடகளம்) ரோட் லாவெர் (ரென்னிஸ்) ஆகியோர் போல் ஆட்டத்தில் உயர்வான நிலையில் இருக்கையில் விளையாட்டில் இருந்து விடை பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். 2016ஆம் ஆண்டில் ரியோடிஜெனீரோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்றால், அது நான் விடைபெற சரியான வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். எனது ஆட்டம் வேகத்தின் தன்மையை பிரதிபலிப்பதாக இருக்கும். நான் நீண்டகாலமாக சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகிறேன். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் வெல்ல என்ன செய்ய வேண்டும் என்பது அனுபவத்தின் மூலம் எனக்குத்தெரியும். டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போன்ற பெரிய போட்டிகளில் நெருக்கடியை தவிர்ப்பது எப்படி என்பதை அனுபவம் உணர்த்துகிறது. ஆட்டத்தின் முடிவில் எல்லோரையும் போன்று தான் நானும் உணர்ச்சி வசப்படுவேன்.

**லியாண்டர் பயஸ் (இந்தியா)**

தற்போதைய சூழ்நிலையில் ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவிக்கு அப்ரிடி சிறந்த தேர்வாக இருப்பார். டெஸ்ட் போட்டியில் வெற்றிகரமாக செயற்படும் ஒரு கப்டன், ஒருநாள் போட்டியிலும் சிறப்பாக செயற்பட முடியாது. ஒருநாள் போட்டியில் கப்டன் வேகமாக முடிவு எடுக்க வேண்டும். அந்தத் திறமை உடையவர் அப்ரிடி ஆவார். அதற்காக மிஸ்பா உல் ஹக்கை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவரது முடிவுகள் விரைவானவை அல்ல.

**அப்துல் ரசாக் (பாகிஸ்தான்)**

ஐ.பி.எல். தொடரில் பிராவோ காயத்தால் விலகினார். இதனால் அணிக்கு பாதிப்பு இருந்தது. தற்போது அவர் அணிக்கு திரும்பியிருப்பது பலமாகும். எங்கள் அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர். ஐ.பி.எல். தொடரில் 2 மாதங்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டமை இந்தப் போட்டியில் பலனை தரும். சம்பியன்ஸ் லீக் கோப்பையை வெல்லும் ஆர்வத்தில் இங்குள்ள மைதான சூழ்நிலையை கருத்தில் கொண்டால் ஐ.பி.எல். அணிகளுக்கு கோப்பையை வெல்ல அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் ருவென்ரி- 20 போட்டி அதிர்ஷ்டம் போன்றது. குறிப்பிட்ட நாளில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். தனிநபர் ஒருவரால் ஆட்டத்தின் வெற்றி - தோல்வியை நிர்ணயிக்க முடியும்.

**டோனி (சென்னை அணிக் கப்டன்)**

# கேள்விக்குறியாகியுள்ள எதிர்காலம்



கொலை நோக்கம் இல்லாமல் இடம்பெற்ற ஒரு மரணத்தை விளைவித்ததற்காக, நீதிமன்றதால் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டுள்ள தென்னாபிரிக்க வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸின் விளையாட்டு எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. உலகில் தலைசிறந்த தடகள வீரர்கள் பங்குபெறும் டயமண்ட் லீக் போட்டிகளில் பங்குபெற இனி ஆஸ்கர் பிஸ்டோரியஸ் அழைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று, அந்தப் போட்டிகளின் ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். பிரசல்ஸில் நடைபெறும் டயமண்ட் லீக் போட்டிகளின் தலைவரான வில்.:.பிரெட் மீர்ட், இனி அவருக்கு அந்த வாய்ப்புக்கள் கிடைப்பது சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளார். இதே கருத்துதான் மற்ற டயமண்ட் லீக் போட்டிகளை நடத்துபவர்கள் மத்தியிலும் இருக்கக் கூடும் என்று, தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ஆனாலும், அவர் சிறைக்கு செல்லாவிட்டால், 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பார ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார் என்று சர்வதேச பாரா ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. போட்டிகளில் பங்கேற்க முடியாது என்று நீதிபதி கூறாதவரை, ஆஸ்கர் பிஸ்டோரியஸ் போட்டிகளில் பங்கேற்க முடியும் என்று தென்னாபிரிக்க விளையாட்டு சம்மேளனங்கள் மற்றும் ஒலிம்பிக் சபையின் தலைவர் டப்பி ரெட்டி தெரிவித்தார்.

விளையாட்டுச் செய்திகள்


### அகில இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகளம்

# யாழ். பல்கலைக்கு தங்கம் உட்பட 7 பதக்கங்கள்


ஜெயரஞ்சினி


துஸ்யந்தி


பிரசன்னா


கபிலன்


எட்வேட் ஜோசப்

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டியில் யாழ்ப் பாண பல்கலைக்கழகம் ஒரு தங்கம் உட்பட ஏழு பதக்கங்களைக் கைப்பற்றி யுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக வீர,வீராங் கனைகளுக்கான தடகளப் போட்டி கடந்த 6,7ஆம் திகதிகளில் மகிந்த ராஜ பக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில், பெண்களுக்கான ஈட்டி எறித லில் எஸ்.தாரணி தங்கப் பதக்கத்தை யும், 100 மீற்றர் மற்றும் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட போட்டியில் எஸ்.ஜெய ரஞ்சினி வெள்ளிப் பதக்கத்தையும், உய ரம் பாய்தலில் ஜி.துஸ்யந்தி வெண்கலப் பதக்கத்தையும், ஆண்களுக்கான தட் டெறிதல் போட்டியில் ரி.பிரசன்னா, 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் ரி.கபிலன், 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் ஏ.ஜே.எட்வின் ஜோசப் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக தடகள ஆண் கள் அணியின் முகாமையாளராக ஜி.டி.மதியழகன், பெண்கள் அணியின் முகாமையாளராக திருமதி. ஜெ.சரவண பவ ஐயர் ஆகியோரும், பயிற்றுனராக செல்வி. இ. அருளம்பலமும் இப்போட் டிக்கு கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# ஞானவைரவர் பெருவெற்றி

(அளவெட்டி)

வலி. வடக்கின் சமர் மென்பந்து கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் அளவெட்டி ஞானவைரவர் அணி அபார வெற்றிபெற்றது.

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழத் தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட் டித் தொடர் கடந்த சனிக்கிழமை நடை பெற்ற போட்டியில் அளவெட்டி மத்தி, ஞானவைரவர் அணிகள் மோதின. முதலில் ஆடிய அளவெட்டி மத்தி அணி 13.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுககளையும் இழந்து 27 ஓட்டங் களைப் பெற்றது. இதில் கபிலன் 3 ஓட் டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரணவன் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய ஞானவைரவர் அணி 8 ஓவர்கள் நிறைவில் ஒரு விக் கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. இதில் வலிங்டன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுதன் ஒரு விக் கெட்டைச் சாய்த்தார். (93)



# ஜெயரூபன் அதிரடிச் சதம் கே.சி.சி.சி. அபார வெற்றி

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப் பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் கே.சி.சி.சி. அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவாக்கி முன்னிலை பெற்றுள்ளது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் இப்போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங் களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் கொக்குவில் கே.சி. சி.சி. அணியும் நியூஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

பதிலுக்கு 180 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஜெயரூபனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 23.3 ஓவர்கள் நிறை வில் விககெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஏ. ஜெயரூபன் 12 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 108 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றுமொரு போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை கொக்குவில் கே.சி.சி.சி. அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. முதலில் ஆடி ஜொலிஸ்ராரி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஆர். பவி தரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 26 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வல்லவக்குமரன் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

இதேவேளை, கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஏற்கனவே, வட்டுக் கோட்டை ஓல்கோல்ட் அணியை வீழ்த்தியிருந்தது. நியூஸ்ரார் ஜொலிஸ்ரார் அணிகளை வெற்றிக்கொண்டதன் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவாக்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (93)

# கைகலப்பில் முடிந்த கால்பந்து போட்டி



கொக்குவில் சிவகுரு விளையாட்டுக்கழ கம் நடாத்திய அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி யில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கைகலப்பில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையென்பதுடன், மேலதிக பொலி ஸார் மைதானத்துக்குள் இறக்கப்பட்டு கைகலப்பு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் கூறினார்கள்.

இது பற்றி தெரியவருவதாவது, மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ஊரெழு றோயல் அணியும் நாவாந் துறை சென். மேரிஷ் அணியும் மோதின. போட்டி ஆரம்பித்து அடுத்த நிமிடமே ஊரெழு றோயல் அணியின் எஸ்.தர்மகுலநாதன் முதல் கோலை போட்டு அணியை முன்னி லைப்படுத்தினார்.

முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டா வது பாதியாட்டத்தில் சென். மேரிஷ் அணி யின் எம்.யூட் ஒரு கோலை பெற்றுக்கொடுக்க போட்டி சமநிலையானது.

எனினும் சமநிலையை தகர்த்த றோயல் அணியின் எஸ்.கானுஜன் ஒரு கோல் அடித் தார். இறுதியில் றோயல் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதனால், ஆத்திரமடைந்த மேரிஷ் அணி இரசிகர்கள் மைதானத்திற்குள் கலகம் விளைவித்தனர். பொல்லுகள், கொண்டு ஊரெழு றோயல் அணியின் வீரர்களை இரசிகர் களை அடிக்க தொடங்கினார்கள். தொடர்ந்து இது கைகலப்பாக மாறவே, கல்வீச்சு தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, மைதானத்திற்கு பொலி ஸார் வரவழைக்கப்பட்டு கைகலப்பு கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

## ரியல் மட்ரிட் அதிர்ச்சித் தோல்வி

லாலிகா கால்பந்து போட்டியில் ரியல் மட்ரிட் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, சம்பியன்ஸ் லீக் இறுதிச் சுற்றில் அடைந்த தோல்விக்கு அட்லெடிகோ மட்ரிட் அணி பழி தீர்த்துக் கொண்டது. ஸ்பெயினில் உள்ள கிளப் அணிகளுக்கு இடையிலான ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டியின் மட்ரிட் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், இந்த இரு அணிகளும் மோதின. இதற்கு முன் இந்த இரு அணிகளும் கடந்த சீசனில், சம்பியன்ஸ் லீக் இறுதிச் சுற்றில் சந்தித்திருந்தன. அதில், ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. மூன்று வார இடைவெளிக்குப் பின் காயத்தில் இருந்து குணமடைந்த ரியல் மட்ரிட் அணியின்நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அணிக்குத் திரும்பி இருந்தார். முந்தைய ஆட்டத்தில் துணை நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தால், இடை நீக்கம் செய்யப்பட்டிருந்த அட்லெடிகோ மட்ரிட் பயிற்சியாளர் டீகோ சைமன், கேலரியில் இருந்தபடி ஆட்டத்தைக் கண்டு களித்தார். ஆட்டம் ஆரம்பமாகி பத்தாவது நிமிடத்தில் கார்னரில் இருந்து கோக் அடித்த பந்தை தியாகோ தலையால் முட்டி கோல் அடித்தார். இதற்கு 26ஆவது நிமிடத்தில் பெனால்டி கிக்கை கோலாக மாற்றி பதிலடி கொடுத்தார் ரொனால்டோ. ஆனால், ஆட்டம் முடிவதற்கு 14ஆவது நிமிடங்களுக்கு முன் அட்லெடிகோ அணியின் ஆர்டாட்ரன் ஒரு கோல் அடித்தார். முடிவில் அட்லெடிகோ வெற்றி பெற்றது.

## அரையிறுதியில் யாழ். மத்தி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டமொன்று எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளது. அத்துடன் இப்போட்டியில் வெல்லும் முனைப்புடன் தீவிர பயிற்சியில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்கள் ஈடுபட்டு வருவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. கடந்த சில வருடங்களாக அரையிறுதிப் போட் டிக்கு முன்னேறித் தவறிய யாழ். மத்திய கல்லூரி அணி இம்முறை அரை யிறுதிப் போட்டிக்கு முன்னேறி தமது திறமைகளை நிரூபித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**9**

– சுப்பராஜன் [வானவில் இதழ்]

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி கிளிநொச்சிக் கிளை அக்கராயன் பகுதியிலுள்ள கோணாவில் மத்திய தர குடியேற்றத்திட்டக் காணி ஒன்றில் (வயல் 10 ஏக்கர், மேட்டுக்காணி 5 ஏக்கர்) பயிற்சி முகாம் ஒன்றையும் அமைத்திருந்தது.

அதுபற்றி "வீரகேசரி" பத்திரிகையின் சகோதரத் தினசரியான "மித்திரன்" செய்தியொன்றையும் ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு சில நாட்களுக்கு முன்னர் பிரசுரித்திருந்தது. அதில் அக்கராயனிலும், வன்னேரிக்குளத்திலும் தீவிரவாதிகள் முகாம் அமைத்திருப்பதுடன், பகலில் விவசாயிகளுடன் சேர்ந்து வயல் வேலைகளில் ஈடுபடுவதாகவும், இரவில் ஆயுதப் பயிற்சி எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இந்தச் செய்தியை அங்கு காணி வைத்திருந்த யாழ். கொட்டடியைச் சேர்ந்த ஒருவர்தான் வழங்கினார் என்பது பின்னர் தெரிய வந்தது.

ஆனால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி கிளிநொச்சிக் கிளையின் இந்த முகாம் குறித்து கிளிநொச்சிப் பொலிசாருக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது. ஏனெனில் 1969இல் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஏழு கட்சி கூட்டரசாங்கம் (இதில் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன) தொழிலாளி வர்க்கத்தின் மேதினமும் பௌத்தர்களின் புனித தினமான வெசாக் தினமும் ஒரேநாளில் வருகிறது என்று சொல்லி மேதினத்தை நாடு முழுவதும் தடை செய்திருந்தது.

அந்தத் தடையை மீறி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலம், பொதுக்கூட்டம் என்பன நடாத்துவதற்கு ஏற்பாடு செய்து வந்தது.

இதை அவதானித்த யாழ்ப்பாணப் பொலிசார் மேதினத்தன்று காலையில் கட்சியின் யாழ்பாணக் காரியாலயத்தை திடீரென முற்றுகையிட்டு அங்கு இருந்த கட்சியின் வட பிரதேசச் செயலாளர் வீ.ஏ.கந்தசாமியையும் வேறு இருவரையும் கைது செய்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வைத்திருப்பதற்குப் பயந்து கிளிநொச்சிப் பொலிஸ் - நிலையத்தில் கொண்டு போய் தடுத்து வைத்தனர்.

அவர்களை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள கட்சியின் பயிற்சி முகாமைக் காட்டும்படி கேட்டிருக்கிறார். அத்துடன் முகாமைத் தேடிப்போவதாகச் சொல்லி அன்றிரவு எங்கெங்கோ போய் சுற்றிவிட்டு வந்து, தாம் போனபோது தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர் எனவும் கதை விட்டிருக்கின்றனர் பொலிசார்.

எனவே 71இல் ஜே.வி.பி. கிளர்ச்சி ஆரம்பமானதும், யாழ்ப்பாணத்தில் கட்சியின் முக்கிய தலைவர்களைத் தேடியதுடன், கிளிநொச்சியிலும் கட்சி உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலுடன் பெரும் தேடுதல் வேட்டையில் இறங்கினர் பொலிசார்.

கிளிநொச்சிப் பொலிசாருக்கு அந்தப் பெயர்ப்பட்டியலைக் கொடுத்தவர் முரசுமோட்டையில் நிறுவனம் ஒன்றை நடாத்தி வந்த ஒரு கிறிஸ்தவ மதகுரு என்பது பின்னர் தெரிய வந்தது.

ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் பல கிளிநொச்சிக் குடியேற்றக் கிராமங்கள் போலவே முரசுமோட்டையிலும் பல இளைஞர்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்திருந்தனர். அது அந்த மதகுருவுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர் முரசுமோட்டை இளைஞர்களின் பெயர்கள் உட்பட கிளிநொச்சியில் கட்சி அமைப்பாளர்களாக இருந்த நா.யோகேந்திரநாதன், ச.சுப்பிரமணியம் உட்பட டசின் கணக்கானவர்களின் பெயரை பொலிசாருக்குக் கொடுத்துவிட்டார்.



வீ.ஏ.கந்தசாமி — கே.ஏ.சுப்ரமணியம் — கவிஞர் சுபத்திரன்

அதேபோல யாழ்ப்பாணத்தில் கட்சியின் முக்கியஸ்தர்களாக இருந்த வட பிரதேசச் செயலாளர் வீ.ஏ.கந்தசாமி, வாலிப முன்னணித் தலைவர் கே.ஏ.சுப்பிரமணியம், வாலிப முன்னணி இணைச்செயலாளர் சி.கா.செந்திவேல், வட பிரதேசக் குழு உறுப்பினர் எம்.ஏ.சி. இக்பால் (ஜே.வி.பி. கிளர்ச்சி நடைபெற்ற நேரம் இக்பால் மன்னார் மாவட்டத்தில் கட்சி அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்) உட்பட பல சாதாரண கட்சி உறுப்பினர்களையும் தேடி பொலிசார் வலை விரித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளராக இருந்த இ.வே.துரைரத்தினம் மற்றும் மாணிக்கம், இராசேந்திரம், மரியதாஸ் போன்றவர்களையும் வவுனியாவில் அமைப்பாளர்களாக இருந்த அ.கௌரிகாந்தன், ச.சுப்பிரமணியம் உட்பட பலரைப் பொலிசார் தேடி வந்தனர்.

கிழக்கைப் பொறுத்தவரை கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளராக இருந்த கே.வி.கிருஸ்ணக்குட்டி (இவர் கேரளாவைச் சேர்ந்தவர்) மற்றும் முக்கியமான கட்சி உறுப்பினர்களான கே.தங்கவடிவேல் (கவிஞர் சுபத்திரன்), கே.யோகநாதன் (கவிஞர் சாருமதி), துரைரத்தினம், நேசராசா, சித்தி, ஆனந்தன் போன்றோரையும் பொலிசார் தேடினர். ஆனால் இவர்களில் பலர் பொலிசாரிடம் அகப்படாமல் தலைமறைவாகிவிட்டனர்.

ஜே.வி.பி. கிளர்ச்சி நடைபெற்ற போது வட பிரதேச செயலாளர் வீ.ஏ.கந்த்சாமி, கிளிநொச்சி அமைப்பாளர்கள் யோகேந்திரநாதன், மணியம் உட்பட ஒருதொகை கட்சி உறுப்பினர்கள் அக்கராயன் - கோணாவிலிலிருந்த பயிற்சி முகாமில் தங்கி இருந்தனர். அது கிளிநொச்சிப் பொலிசாருக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் இவர்களைக் கைதுசெய்ய முயற்சிக்கவில்லை.

அந்த நாட்களில் தினசரி கோணாவில் சந்திக்கு ஜீப்பில் வரும் பொலிசார், கம்யூனிஸ்ட்களின் முகாம் இருந்த 70ஆம் இலக்கக் காணியில் அவர்கள் இருக்கிறார்களா என பொதுமக்களிடம் விசாரித்துவிட்டு திரும்பிச் செல்வது வழக்கமாக இருந்தது.

முகாமில் இருந்த கட்சி உறுப்பினர்கள் அப்பொழுது தாம் விவசாயம் செய்த வயல்களிலிருந்து நெல் அறுவடை செய்து சூடடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்த வேலையை முடித்துக் கொண்டு கிளம்பிச் சென்ற பின்னரே பொலிசார் முகாம் இருந்த காணிகளைச் சென்று பார்வையிட்டதுடன், பொதுமக்களிடம் விசாரணையும் மேற்கொண்டனர்.

அதேநேரத்தில் கிளிநொச்சிப் பொலிசார் முரசுமோட்டைத் தோழர்களைக் கைதுசெய்ய ஒரு தந்திரத்தைக் கையாண்டனர்.

(தொடரும்)




– சுமித்தி தங்கராசா –

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயமாக்கப்படுகின்றதாக சொல்வார்கள். அவ்வாறு சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் சில திருமணங்கள் குறுகிய காலத்திலேயே உடைந்து, கணவன் மனைவி விவாகரத்துப் பெறுவதற்கு நீதிமன்றங்களை நாடிச் செல்கின்றார்கள்.

யாழில் அதிகமாக விவாகரத்து பெறுவதற்கு 30 வயதுக்குட்பட்டவர்களே வழக்கு தாக்கல் செய்வதாக நீதிமன்ற புள்ளிவிபரத்தில் இருந்து தெரியவருகிறது.

யாழ். நீதிமன்றில் 2013 ஆம் ஆண்டு 139 விவாகரத்து வழக்குகள் பதிவுசெய்யப் பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் வரை 104 விவாகரத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்டவர்களினால் மட்டுமே பதிவு செய்யப்பட்டவை.

எமது இளம் சமுதாயத்தில் காதல் வலை பின்னல், 16 வயதை வந்தடைந்ததும் மலர்கின்றது. காதல் மலர்ந்ததும், அவசரமாக திருமணத்தினை முடித்து விட்டு, ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாமல், விவாகரத்துப் பெறுவதற்கு அலைகின்றார்கள்.

மலட்டுத் தன்மை, குணப்படுத்த முடியாத நோய்கள், வேறு பெண்களை நாடிச் செல்தல், வன்மமான உறவுகள், கணவன் மனைவியை துன்புறுத்தல், மனைவி கணவனை துன்புறுத்தல் போன்ற விடயங்கள் காரணங்களாகின்றன.

இவ்வாறு 20 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்ட கணவர்கள் மற்றும் மனைவிகள் 50இற்கு 50 வீதமாக விவாகரத்து பெற நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்கின்றார்கள்.

பக்குவமற்ற தன்மை, முதிர்ச்சி, புரிந்துணர்வு, ஆதரவின்மை போன்ற காரணங்களினாலும் விவாகரத்தினை நாடுகின்றார்கள். அதுமட்டுமன்றி, காதல் திருமணம் செய்தவர்களை பெற்றோர்கள் கூட பிரிக்க நினைக்கின்றார்கள்.

முன்னொரு போதும் இல்லாத வகையில் சமூக மாற்றங்கள், சமூக வலைத்தளங்கள், புதிய தொடர்புகள், கணவன் மனைவியிடம் ஏற்படும் கசப்பு தன்மை...

விபரங்களை அறிந்துகொள்ளாத வெளிநாட்டுத் திருமணங்கள், கணவன் அக்கறை காட்டாமை, பிணைப்பில் தளர்வு ஏற்படுமிடத்து மனைவி வழக்கு தாக்கல் செய்கிறார். அத்துடன், பெண்களிடம் வேலைக்கு சென்று சம்பாதிக்கின்றோம் என அலட்சியப் போக்கைக் கண்டு, ஏமாற்றமடைந்த கணவர்கள் வழக்கு தொடர்கின்றார்கள்.

காதல் திருமணமாகட்டும், நிச்சய திருமணங்கள் ஆகட்டும், கணவன் மனைவி தேவையற்றோரின் வழி நடத்தல்களை பின்பற்றாது, பிரச்சினைகளை தாமே பேசித்தீர்த்துக் கொள்வதுடன், புரிந்துணர்வும் அவசியமாக கருதப்படுகின்றது.

இருவருமே சமூக வலைத்தளங்களை பாவித்து நண்பர்களையும், நட்புக்களை வைத்திருந்தாலும், கணவன் மனைவி பந்தத்தை - தமது உணர்வுகளை விட தம்மில் அதிக அன்பு வைத்திருப்பவர்களின் மனதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் விவாகரத்தினை விலக்கி வைக்க முடியும்.

ஏதோ ஒரு வகையில், விவாகரத்து என்ற பேச்சு கணவன் மனைவி வாழ்க்கைக்குள் உட்புகாது தடுப்பதற்கு, கணவன் மனைவி இருவரும் மனம்விட்டு பேசிக்கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கை உடையவர்களாக இருந்தால், கணவனின் தவறுகளை மனைவி மாற்றிக் கொள்ள முடியும், மனைவியின் தவறுகளை கணவன் திருத்திக் கொள்ள முடியும், இருவரும் தன்னம்பிக்கை அற்றவர்களாக வாழ முயன்றால், வாழ்க்கை சேறாகிவிடும்.

வாழ்க்கை என்ற தேன் கூட்டினை உடையாது, முழு மனதுடன் வாழ்வதற்கு கணவன் -மனைவி விட்டுக்கொடுப்புக் கொண்டவர்களாக மாற வேண்டும். அப்போது, வாழ்க்கை இனிக்கும், விவாகரத்து என்ற பேச்சையே மறந்து விடலாம்.

## மென்பான ஆபத்து!



மென்பானத்தில் உள்ள பொருட்களால் ஏற்படும் நோய்கள் பற்றி இந்தியாவிலுள்ள அறிவியல் இயக்கமொன்றின் பிரசார நூலில் குறிப்பிடப்பட்டுள்ள எச்சரிக்கைகள்:

- சித்தரிக் அமிலம், மாலிக் அமிலம் மற்றும் பொஸ்போரிக் அமிலம்: இது உணவுப் பாதையின் மெல்லிய சுவரைக் கரைக்கும் குடல்புண்ணை உருவாக்கும்.
- காபனீரொட்சைட் மற்றும் பொஸ்போரிக் அமிலம்: இது எலும்பிலுள்ள கல்சியத்தைக் கரைக்கும்.
- காபைன்: இது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும்.
- கரமல்: இதனால் புற்றுநோய் உருவாகும்.
- சீனி: நீரிழிவுநோயை உருவாகும்.

# தோழர் பாலாதம்பு ஒரு வரலாறு




- சுகு-ஸ்ரீதரன் -

தோழர் பாலாதம்பு கடந்த 6 தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை வர்த்தக மற்றும் பொது தொழிலாளர் மனங்களில் கம்பீரமாக உட்கார்ந்திருந்தவர்.

தனது 90களிலும் எழுச்சி மனநிலை கொண்டிருந்தார்.

இலங்கையின் அரசியல் வானில் நேர்மையாகவும், அர்ப்பண உணர்வுடனும், உறுதியாகவும் தொழிலாளர் இயக்கத்திற்குப் பங்களித்த வர்களில் தோழர் பாலாதம்பு முதன்மையானவர்.

1940பதுகளில் தீவிர இடது-தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபாடு செலுத்திய பாலா முதலாளித்துவ கட்சிகளுடன் சேர்ந்து சமூக சீர்திருத்தங்களை யோ-மாற்றங்களையோ நிகழ்த்தலாம் என நம்பவில்லை.

1960களின் மத்தியில் அவர் லங்கா சமசமாஜ கட்சியில் இருந்து பிரிந்து புரட்சிகர லங்கா சமசமசமாஜ கட்சியை உருவாக்கினார்.

பின்னர் தமது வர்த்தக ஊழியர்சங்க செயற்பாடுகளுடன் தனது பணியைத் தொடர்ந்தார்.

தோழர் வாசுதேவா, தோழர் பாலா தம்புவின் வாழ்க்கைக் காலத்தை 3 ஆகக் கூறியுள்ளார்.

காலனி எதிர்ப்பு - சமூக ஜனநாயக - நவதாராளவாத என வகுத்துள்ளார்.

அவர் ஒருவரலாறாக வாழ்ந்தார்.

தொழிலாளர் நலன்களுக்காக இடையறாது வீதியிலிறங்கியவர்.

சாதாரண தொழிலாளர்களே எப்போதும் அவருடன் கூட இருந்தார்கள். இளம் தொழிலாளர்களை அவர் உற்சாகப்படுத்தினார்.

1971 இல் கிளர்ச்சி செய்த இளைஞர்களுக்காக அவர் நீதிமன்றத்தில் வாதாடினார்.

அதேபோல் 1979 இன்பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர் களுக்காகவும் அவர் வாதாடினார்.

அவர் இனவாதம் கடந்தவர். சமகாலத்தில் அப்படியாரும் வாழ்ந்ததாக தோன்றவில்லை. எத்தரப்பிலிருந்து வந்தாலும் அவர் அதற்கு அடிபணியவில்லை.

எளிமை - நேர்மை - அர்ப்பணம் - பிடிவாதமான தொழிலாளவர்க்க மனநிலை

நேரடியாக அவர் எனக்கு அவ்வளவாக பரிச்சயம் இல்லை. நேர்மையான மனிதர்கள் பற்றிய தேடலில் அவர் மீது எனக்கு ஈடுபாடு இருந்தது. இலங்கையின் அரசியலில் தொழிலாளர் விரோத போக்கு, சர்வாதிகாரம் தொழிலாளர் நல மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அவருடைய கருத்துக்கள் அறிக்கைகள் ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தன.

1980களில் பரந்தன் இரசா-யனத் தொழிற்சாலையை எம்பிலிப்பிடியாவிற்கு மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தபோது சி.எம்.யு. போராட்டத்தை முன்னெடுத்தது. ஈழமாணவர்பொதுமன்றம் நவசமசமாஜகட்சி புரட்சிக்கம் யூனிஸ்ட் கழகம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவளித்தன.

இலங்கையில் 1995 இல் தேசிய தொழிலாளார் சாசனம் உருவாக்கத்தில் காத்திரமான பங்களிப்பை நல்கியவர்.

6 தசாப்தங்களுக்கு மேலாக தொழிலாள வர்க்கத்திற்கான அறத்தை நிலைநாட்டப் போராடியவர்.

அவரது சொந்த - பொது வாழ்வு இர்ண்டறக்கலந்தது.

அவர் மரணிப்பதற்கு சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். நல்லூரில் ஒரு கருத்தரங்கில் அவரது அனுபவங்கள் மிகுந்த தன்னடக்கத்துடன் பகிரப்பட்டன.

தொழிலாளர்கள் புரட்சிகர இயக்கம் பற்றிய நம்பிக்கை களை இத்தகைய மனிதர்கள் தான் தக்கவைக்கிறார்கள்.

# உலகிலேயே அதிகம் பேர் பார்த்த புகைப்படம்



கம்ப்யூட்டர் திரையில் வரும் விண்டோஸ் வோல் பேப்பர்தான் உலகிலேயே அதிகம் பேர் பார்த்த புகைப்படம்! அந்தப் புகைப்படத்தை எடுத்தவர் சார்ள்ஸ் ஓ ரியர் என்பவர்.

அமெரிக்காவின் நபா வில்லி பள்ளத்தாக்குப் பகுதியில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. கண்ணைக் குளுமைப்படுத்தும் இந்தப் படத்தைப் பார்த்த பில் கேட்ஸ் இதை வாங்கி விண்டோஸின் வோல் பேப்பராக மாற்றி விட்டார்.

சார்ள்ஸ் ஓ ரியர் 1941ஆம் ஆண்டு பிறந்தவர். புகைப்படம் எடுப்பதைத் தொழிலாகக் கொண்டவர். இவர் எடுத்த படம்தான் இந்த பிளிஸ்.. இதைத்தான் விண்டோஸ் வோல் பேப்பராக நாம் பார்க்கிறோம்.

மைக்ரோசொப்ட் நிறுவனர் பில். கேட்ஸ், இன்னொருவருடன் இணைந்து முன்பு கோர்பிஸ் போட்டோகிராபி நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். இதில் புகைப்படக்காரராக சார்ள்ஸ் ஓ ரியர் வேலை பார்த்தபோதுதான் அவரது பிளிஸ் படம் கேட்ஸைக் கவர்ந்து அதை வாங்கி வோல் பேப்பராக்கி விட்டார்.

கம்ப்யூட்டர் வைத்துள்ள அத்தனை பேரும் பார்த்த படமாக இருப்பதால், உலகில் அதிகம் பேர் பார்த்த புகைப்படம் என்ற பெருமையை இது பெற்றுள்ளது.

# வலையில் கிடைத்தவை...




### பாலஸ்தீன மக்களை உளவுபார்க்க முடியாது

பாலஸ்தீனர்களை உளவு பார்க்க நியமிக்கப்பட்ட, இஸ்ரேலிய இராணுவத்தை சேர்ந்த 43 பேர், வேலை செய்ய மறுத்துள்ளனர். தமது உளவறியும் வேலை, அப்பாவி பாலஸ்தீன மக்களின் சுதந்திரத்தை கட்டுப் படுத்துவதாகவும் தெரிவித்துள் ளனர். உண்மையில், சாதாரண பாலஸ்தீன மக்களுக்கு தமது அந்தரங்கத்தை பாதுகாக்கும் உரிமை கூட கிடையாது. இவ்வாறு, வேலை செய்ய மறுத்துள்ள 43 உளவாளிகளும், பிரதமர் நெத்தன்யா குவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய பாதுகாப்பை காரணமாகக் காட்டியே, பாலஸ்தீனர்கள் பற்றி உளவுத் தகவல்கள் சேகரிக்கப் படுகின்றன. ஆனால், அது எல்லை மீறிப் போவதாக முன்னாள் உளவாளிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதாவது, ஓர் அப்பாவி பாலஸ்தீனர் பற்றிய தகவல்களைக் கொண்டு, அவரை மிரட்டுவது அடிக்கடி நடக்கிறது.

அப்பாவி பாலஸ்தீனர்களை பிளாக் மெயில் செய்து அரசுக்கு வேலை செய்ய வைப்பது, அல்லது இன்னொரு பாலஸ்தீனருக்கு எதிராக திசை திருப்பி விடுவதும் நடக்கிறது. இவை எல்லாம் "தேசப் பாதுகாப்பு" என்று நியாயப்படுத்த முடியாதவை. பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ள, இருபது வயதுக்கும் முப்பது வயதிற்கும் இடைப்பட்ட இஸ்ரேலிய இளைஞர்கள், ஒரு காலத்தில் தமது தாய்நாட்டை பாதுகாக்கும் கடமையில் ஈடுபடுவதாக, உளப்பூர்வமாக நம்பியவர்கள்.

Das Leben der Anderen (மற்றவர்களின் வாழ்க்கை) என்ற திரைப்படத்தை பார்த்த பின்னர், தான் செய்வதும் அதே தான் என்று உணர்ந்ததாக, ஓர் இஸ்ரேலிய உளவாளி ஊடகங்களுக்கு தெரிவித்தார். திரைப்படத்தில் காட்டப் படுவது மாதிரி மட்டுமல்லாது, அதை விடத் திறமையாக இஸ்ரேலிய உளவுப் பிரிவு செயற்படுவதாக கூறி னார். Das Leben der Anderen என்ற ஜேர்மன் மொழி திரைப்படம், முன்னாள் சோஷலிச கிழக்கு ஜெர்மனி யில், பிரஜைகளை உளவு பார்க்க நியமிக்கப்பட்ட Stasi உளவாளியின் கதையைக் கூறுகின்றது.

ஒரு பாலஸ்தீனர் மீது சந்தேகம் எழுந்தால், கணனிக் கோப்பில் அவரது பெயருக்கு நேரே புள்ளடி போடப்படும். எந்தக் காலத்திலும், அது எடுக்கப்படாது. அதனால், குறிப்பிட்ட நபர் அப்பாவியாக இருந்தாலும், வாழ்க்கை முழுவதும் சந்தேக நபராக்வே கருதப்படுவார். இஸ்ரேலிய பாது காப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் மட்டும் சந்தேக நபர்களின் கோப்புகளில் பதியப் படுவதில்லை. அவரது அரசியல் கருத்துக்கள், அந்தரங்க தகவல்கள் எல்லாம் பதிவு செய்யப்படும். பாலஸ்தீனர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு, நாம் எந்த மரியாதையும் கொடுப்பதில்லை.

இஸ்ரேலில் "Refuseniks" என அழைக்கப்படும், இராணுவத்தில் சேவை செய்ய மறுக்கும் இஸ் ரேலிய பிரஜைகள் பலர் உள்ளனர். குறிப்பாக பாலஸ்தீன பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத் தப்பட்ட போர்வீரர்கள், மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களை செய்ய மறுத்து வேலையை இராஜினாமா செய்துள்ளனர். இஸ்ரேலில் கட்டாய இராணுவ சேவை உள்ளது. தற்போது வேலை செய்ய மறுத்துள்ள 43 பேரும், சேவையில் இல்லாத சேமப் படைவீரர்கள். அதனால், அவர்களின் வேலை மறுப்பிற்காக, சட்டப்படி ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

- கலையரசன்

### போரின்றி அமையாது அமெரிக்கா!

உலகில் எங்கு யுத்தம் நடைபெற்றாலும், அதற்கு பின்னணியில் அமெரிக்கா இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. அந்த அளவிற்கு யுத்தப் பிரியர்களாக இருக்கின்றனர் அமெரிக்க ஆட்சியாளர்கள். ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அமெரிக்கா பத்து ஆண்டுகள் யுத்தம் செய்த போது, கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டது. இதனால், ஒரு அமெரிக்க குடும்பம் சராசரி, ஒரு கோடி 15 இலட்சம் ரூபாய் கடனாளி ஆகி உள்ளது. இதனால், 2001 முதல் 2012 வரை, அமெரிக்காவின் கடன், 20 சதவீதம் அதிகரித்துள்ளது. பெரும் பொருளாதார இழப்புடன், பயிற்சி பெற்றுள்ள பல்லாயி ரம் இராணுவ வீரர்களையும் இழந்துள்ளது அமெரிக்கா. இப்படி இருந்தும் அடுத்தபடியாக எங்கு யுத்த அரங்கேற்றம் நடத்துவது என்று அமெரிக்கா யோசனை செய்து வருவது வருந்தத்தக்கது.

- தினமலர்

### பிறர் அந்தரங்கத்தில் நுழையும் சட்ட அனுமதி!

நான், ஹவாய் தீவுகளுக்கு போயிருந்த போது, அங்கு ஒரு மாடிக்குடியிருப்பில் தங்கியிருந்தேன்; அதைச் சுற்றிலும் உயரமான கட்டடங்கள். அதிக வெப்பம் காரணமாக, அங்கிருந்தவர்கள் மிகக் குறைந்த ஆடையே அணிந்திருப்பர். அதனால், அவர்களை அந்த நிலையில் பார்ப்பதற்கு என் பைனாகுலரை திருப்பினேன். அப்படிப் பார்க்கும் போது தான் தெரிந்தது, என்னைப் போலவே இன்னொரு ஆசாமியும், பைனாகுலர் மூலம் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, நான் பைனாகுலர் மூலம் பார்ப்பதை யும் பார்த்துக் கொண்டிருந்தான் என்பது! என்னைப் பார்த்து, சில ஆபாசமான செய்கைகளையும் செய் தான். பின், எப்படியோ என் இருப்பிட டெலிபோன் நம்பரைத் தெரிந்து, போன் செய்தான். அவன் பேச்சை அச்சேற்ற முடியாது; அவ்வளவு ஆபாசம். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில், அது என்னுள் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது; அன்றிலி ருந்து இதுபோல் பிறரது அந்தரங்க விவகாரங் களைப் பார்ப்பது என்ற விஷயத்தை விட்டு விட்டேன்.

இந்தியாவில் எதுவுமே ரகசியம் கிடையாது; ஒரு நெருங்கிய கிளார்க்கின் மூலம் நான் எழுதும் தபால்களும், எனக்கு வரும் தபால்களும் பிரித்துப் பார்க்கப்படுவதை அறிந்தேன்.

அதோடு மட்டுமல்ல, டெலிபோனில் நான் பேசுவதெல்லாம் பதிவு செய்யப்படுகிறதாம்; இதை அறிந்து எனக்கு கடுங்கோபம் வந்தது. ஆனால், இதற்கு, 100 ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் அனுமதி இருக்கிறது என்று தெரிந்ததும், திடுக்கிட்டேன்.

- குஷ்வந்த் சிங் (1984)







வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் சிற்றூழியர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச சபையில் நடைபெற்றபோது. (18)

# இளைஞர்களை சரியாக வழிநடாத்தினால் எமது பிரதேசத்தில் வசந்தம் வீசும்

## ஈ.பி.டி.பி. சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூகத்தினதும் நாட்டினதும் தலைவிதிகளை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் வாழும் இளைஞர்கள்தான். இவர்களை சரியான பாதையில் வழிநடாத்தினால் எமது பகுதிக்கான வசந்தத்தை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். இதன் முயற்சியாகத்தான் இப்பகுதியில் இளைஞர் அணியை உருவாக்கியுள்ளோம் என ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் எஸ்.விந்தன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி இளைஞர் அணி அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எமது மண் யுத்தத்தினால் ரணகளமாக்கப்பட்டதுடன் அதன் வடுக்களிலிருந்து எமது மக்கள் இன்று மீளெழுந்து வருகின்றார்கள். இத்தகைய மக்களை வாழ்வியலிலும் சமூக கட்டுமானங்களிலும் மேம்படுத்துவதற்காகத்தான் இன்றைய இளம் சமூகத்தினரை அவற்றில் ஈடுபடுத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

தமிழர்களது கடந்த கால வரலாற்றில் இளைஞர் அணிகளது செயற்பாடுகள் பலமிக்க போராட்ட வல்லமையை பெற்றிருந்தன. ஆயுதப்போராட்ட வலிமையை பெற்றிருந்த இளைஞர்கள் சரியான அரசியல் வழிநடத்தல்கள் இன்மையால் மிகப் பெரும் அழிவைச் சந்தித்தனர். அத்தகைய வழிகளில் ஈடுபடாது சமூகத்தினது வளர்ச்சியையும் மக்களது நலனையும் கொண்டதாக இன்று உதயமான இளைஞர் அணி பயணிக்கவேண்டும் என்பதுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

தனிநாடு கோரி இளைஞர்களை தூண்டிவிட்டு இரத்தப் பொட்டுக்களை பெற்றுக்கொண்டவர்கள் எவரும் நாங்கள் போராடியபோது எங்களுக்கு துணையாக இருந்ததில்லை. அண்டை நாடுகளுக்கு ஓடிச் சென்று தனி வீடுகள் பெற்று உல்லாசமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களால் தூண்டப்பட்ட இளைஞர்கள் துன்பத்தில் துடித்தபோதும் கூட அவர்கள் மௌன மாகத்தான் இருந்தார்கள். இந்த உண்மை நிலையை யாராலும் மறந்துவிடமுடியாது. ஈழத்தில் போராடி மடிந்த இளைஞர்களது இரத்தத்தில் இன்று தமது பதவி நாற்காலிகளை நட்டுவைத்திருப்பதைத் தவிர மக்களுக்கும், போராடிய இளைஞர்களுக்கும் எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

இத்தனை அழிவுகளின் பின்னும் அவர்கள் பின்னால் செல்லும் மக்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதனைக் கூறுகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சரின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன், ஈ.பி.டி.பி.யின தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், மகேஸ்வரி நிதிய இணைப்பாளர் ரஜீவ், ஈ.பி.டி.பி.யின் ஊடகச்செயலாளர் ஸ்ராலின் ஆகியோருடன் கட்சி முக்கியஸ்தர்களும் 200 இற்கு மேற்பட்ட இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாண்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலகத்தின் வழிகாட்டலில் புத்தாக்க அரங்க இயக்கத்தினரின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட நாடக களப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் நாடகப்பயிற்சி நெறிக்கு வளவாளர்களாக பங்கு கொண்ட புத்தாக்க அரங்க இயக்கத்தின் எஸ்.ரிகுமரன் எஸ்.ரி.அருள்குமரன், இரர். இதயராஸ், எஸ்.தேவமுகுந்தன் இ.வினோதன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மேற்படி பயிற்சி நெறியில் தலைமைத்துவம், எண்ணக்கருவாக்கம், நெறியாள்கை, நடிப்பு போன்ற பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பயிற்சி நெறியில் 30 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட இரு நாடக ஆற்றுகை நிகழ்வுகளும் இதில் இடம்பெறவுள்ளன. (63)

# மகளிர் சங்கங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பனங்காமம் பிரதேச பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தால் பனங்காமம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கென 8 இலட்சம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பனங்காமம் பற்று கிராமத்திலுள்ள யுவதிகளின் வாழ்நிலை முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கில் அவ்வமைப்பினர் யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்திடம் விடுத்த கோரிக்கையினை அடுத்து மேற்படி நிறுவனத்தினால் இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

தகரப்பந்தல், கதிரைகள், கிடாரப்பாத்திரம் போன்ற பொருட்களை வடகைக்கு கொடுத்து அதன் ஊடாகப் பெறப்படுகின்ற நிதியின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் உதவித் திட்டங்கள் இப்பிரதேசத்திலுள்ள அமைப்புக்களில் முன்மாதிரியான செயற்பாட்டிற்குக் கிடைத்த ஓர் அங்கீகாரம் எனவும் மகளீர் அமைப்பினர் தெரிவித்தனர்.

# நினைவுதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான வன்னியசிங்கத்தின் நினைவு தினம் இன்று புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நீர்வேலியில் அமைக்கப்பட்டுள்ள வன்னியசிங்கத்தின் சிலைக்கருகாமையில் இந் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் கூட்மைப்பின் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற மாகாண சபை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அஞ்சலிகளும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# முரசின் இன்றைய பலன்



(17.09.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 01 ஆம் திகதி.
நவமித்திதி / சித்தம் நாமயோகம்.
திருவாதிரை நட்சத்திரம் பின்னிரவு 04.39 வரை. பின் புனர்பூஷம்.
இராகு காலம் 12.03 - 01.33 வரை. சுபநேரம் 04.33 - 06.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றி பரிசில்களும் பாராட்டும் பெறுவதைக்கண்டு பெற்றோர் மகிழ்வடைதல். |
| ரிஷபம் | திருத்தகத்திற்கு கொடுத்த இயந்திரம் நீண்டநாட்களாக இழுபடுவதினால்துயரம்மிகுதல், விலாசமிட்ட கழதம்உரிமையாளருக்குச் சென்றுசேராமை எண்ணி வேதனைப்படல். |
| மிதுனம் | உதவி செய்கின்றேன் என முன்வந்தவரின் கபடத்தை அறியாமல் பணம் இழந்து போதல். |
| கடகம் | ஆவணங்களின் குறைபாடு காரணமாக போக்குவரத்து காவலரினால் தண்டம் விதிக்கும் நிலைக்கு உள்ளாதல், பழுதடைந்த உணவுப் பொருட்களினால் தேகநலம் பாதிக்கப்படல். |
| சிம்மம் | இரவில் பயணம் செய்தபோது விபத்து ஏற்படல், வெளியூர் சென்றடைய ஆயத்தமாதல். |
| கன்னி | திருடப்பட்ட பொருட்கள் கிடைத்ததால் மனமகிழ் வேற்படல், நண்பர்கள் சிலருடன் வாக்குக்கலகம் ஏற்படல். |
| துலாம் | சோதனைகள்விலகி விடும், புதியன கொள்வனவிற்கு மக்களின் வெளியூர் பணம் பேருதவியாக இருத்தல். |
| விருச்சிகம் | தற்கால பணியில் இருந்த சேவை நிரந்தர மாக்கப்படல், அனுப்பிய பணத்திற்கு தாரத் திடம் கணக்கு கேட்க முயன்றபோது ரகளை ஏற்படல். |
| தனுசு | எவருக்கும் வாக்குக்கொடுப்பதையும் பணத்தைக் கையளிப்பதையும் விட்டு விடுங்கள், மறைமுகச்செயற்படும் எதிரி ஒருவரினாலகௌரவப்பாதிப்பும் ஏற்படலாம். |
| மகரம் | தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய விலைக் கழிவினை ஏற்படுத்தல், சூதாட்டத்தில் ஈடு பட்ட வேளை காவலர்கள் பிழபட்டு எச்சரிக்கை செய்யப்படல். |
| கும்பம் | நோயகல மருத்துவத்தைக் கைகழுவிட்டு தெய்வதலங்களை நாடுதல், வாக்குவாதப்பட்டதினால் நெடுநாள் நட்புக்கெட்டுவிடல். |
| மீனம் | விரும்பிய இடத்திற்கு பதவி நியமனம் செய்யப்பட்டதால் உவகையடைதல், அனுமதி கிட்டுவதற்கு உயர் அதிகாரி சிபார்சு செய்தும் கிட்டாமையினால் கவலை. |

# மருத்துவபீட வளாகத்தில் டெங்குநோய் அபாயம்

## - நிவர்த்தி செய்ய அறிவுறுத்து -

(யாழ்ப்பாணம்)

சுகாதார வைத்திய அதிகாரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் சோதனை நடத்திய போது அங்கு காணப்பட்ட டெங்கு நுளம்பு பெருக ஏதுவான காரணிகளை நிவர்த்தி செய்யுமாறு பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணத்திற்கு அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் மருத்துவபீட மாணவி ஒருவருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சோதனைகளை மேற்கொண்ட சுகாதார திணைக்களத்தின் வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் கடந்த மாதம் மருத்துவபீட வளாகம் முழுவதும் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டதுடன் சுற்றாடல் கண்காணிப்பிலும் ஈடுபட்டனர். இதன்போது கட்டுமான பணிகளின் இடைநடுவில் கைவிடப்பட்ட கழிவுநீர் தொட்டியினை முழுமையாக கட்டி முடித்து நுளம்பு புகாத படி அமைக்க வேண்டும். மற்றும் அங்கு காணப்படும் ஏனைய குழிகள் அனைத்தும் மூடப்பட வேண்டும் எனவும் அங்கு உள்ள கழிவுநீர்கள் அனைத்தும் பிரத்தியேகமான கழிவுநீர் தொட்டியில் சேமிக்கப் பட வேண்டும்.

அந்த கழிவுநீர் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு தாவரங்களுக்கு நீராகபயன்படுத்த முடியும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் தொடர்ந்து டெங்குநுளம்பு உள்ளிட்ட நோய்காவிகள் உருவாவதற்கு ஏதுவான காரணிகள் உள்ளனவா என கண்டறிந்து அதற்கு ஏற்ற தீர்வுகளை பெற்று கொள்வதற்கென என தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து அவர் கிரமமான முறையில் சோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கு டெங்கு தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து கலைப்பீடத்தினரின் சில விரிவுரைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் ஆனந்த குமாரசுவாமி விடுதியும், தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. தற்போது மேற்படி பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக உள்ள காரணிகள் பற்றி அதிகாரிகள் சோதனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது

(54)

# பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அலுவலகப் பிரிவில் சிறந்த பண்ணையாளர் தெரிவு இடம்பெறவுள்ளது.

இக் கால்நடை வைத்திய அலுவலகப்பிரிவுக்குட்பட்ட பிரதேசசங்களில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கானை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் இச் சிறந்த பண்ணையாளர்கள் தெரிவில் பங்குபற்ற முடியும்.

விண்ணப்பப்படிவத்தை வட்டுக்கோட்டை அரசகால்நடை வைத்தியநிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது

மேலும் இப்பிரதேசங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் சிறந்த பண்ணையாளர்கள் தெரிவில் பங்குபற்ற முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த உற்சவம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். அத்துடன் அன்னதானம் வழங்கலும் நடைபெறும்

# திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தரம மற்றும் க.பொ.த உயர்தரப்பரீட்சை 2013இல் உயர்பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் வழங்கி பதக்கம் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வடமாகாண கல்வியமைச்சின் உதவிச்செயலாளர்களான தெய்வேந்திரராசா சுகந்தி பெப்ஸ்ரீன் ஆகியோர் விருந்தினர்களைக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பதக்கங்களை அணிவித்து கௌரவித்தனர்.

யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் என பெருமளவானவர்களும் கலந்து கொண்டனர். (பா)

# ஆயுர் வேதம்

## உடல் மெலிவது ஏன்?



உயரத்திற்கேற்ற உடலின்றி மெலிந்து காணப்படுதல், எதைச் சாப்பிட்டாலும், உடலில் ஒட்டுதில்லையே என்ற கவலை சிலருக்கு இருக்கிறது.

இப்படியானவர்களுக்கு உடற்சூடு இயற்கையாகவே அதிகம் இருக்கும். இதற்குப் பித்த தேகவாகு எனப்பெயர்.

இதுபோன்ற உடல்நிலை உள்ளவர்கள் காரம், புளி, உப்பு போன்ற சுவைகளை உணவில் அதிகம் சேர்க்காதிருப்பதே நலம். துவர்ப்பும் கசப்பும் இனிப்பும் மிக்க உணவு மிகவும் நல்லது.

நெல்லிக்காய், சீனி அல்லது வெல்லம் சேர்த்த பழச்சாறுகள், கசப்பும் துவர்ப்பும் புளிப்பும் மிக்க நார்த்தை, மாதுளை முதலிய கனிகள், வெயிலில் உலர்த்தி நன்கு பழுத்த பழப்புளி, கரும்புச்சாறு, இனிப்பு சேர்த்துக் கடைந்த மோர் இவை ஏற்றவை. நெய், வெண்ணெய், இனிக்கும் தயிர், புளிக்காத இனிக்கும் பழங்கள் ஆகியவை நல்லவை.

சிறுகீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளி, தூதுவளை, முருங்கைக்கீரை, வல்லாரை, புளியாரைக்கீரை, கோவை, பண்ணைக்கீரை, பூசணிக்காய், நீத்துப்பூசணிக்காய், முருங்கைக்காய், மெதுபாகல், கொம்புபாகல், கத்தரிக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், அவரைக்காய், வெள்ளரிப்பிஞ்சு, வாழைக்கச்சல், வாழைத்தண்டு, வாழைப்பூ, சர்க்கரைவள்ளிகிழங்கு, வெங்காயம், களாக்காய், சுண்டை, முதலிய வற்றல்கள் எலுமிச்சை, நார்த்தை, மிளகு, இஞ்சி, மாங்காய் முதலியவற்றாலான ஊறுகாய்கள் சாப்பிட நல்ல உணவுப்பொருட்கள்.

இரவில் சாப்பிடும் உணவானது அதிக சூட்டைக் கிளப்பும் அளவில் காரம், புளி, உப்புச்சுவை நிறைந்தவையாக இருந்தால் காலையில் உறக்கம் கலைந்து எழும்பொழுது உடற்சூடு அதிகமாக இருக்கும். அதனால் இரவில் அவரைப்பிஞ்சு, அத்திக்காய், பசுவின் பால் கடைந்த மோர், முருங்கைப்பிஞ்சு, துவரம்பருப்பு, மணத்தக்காளி வற்றல் முதலியவற்றை உணவாகச் சேர்ப்பது நல்லது.

புழுங்கலரிசியை சோறாக வடித்து இரவில் சாப்பிடுவதால் நன்றாகத் தூங்கி காலையில் எழுந்ததும் களைப்பின்றி உற்சாகம் தருமளவிற்கு இந்த உணவு அமைப்பானது ஏற்படுத்தித் தரும். மேலும், உடற்சூடும், எதுக்களிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாப்பைத் தரும்.

இரண்டு மாதத்திற்கு ஒருமுறை குளிர்ச்சியும், இனிப்பும் நிறைந்த மருந்துப் பொருட்களைச் சாப்பிட்டு பேதி செய்து கொள்வது நலம்.

பேதி மூலம் பித்தத்தை வெளியேற்றிவிடுவது நல்லது. உலர் திராட்சை, பிஞ்சு கடுக்காய், ரோஜா மொக்கு, சூரத்தாவாரை விதை போன்றவை இந்த பேதிமுறைக்கு பயன்படக்கூடியவை. இரவு முழுவதும் இவற்றை வகைக்கு 5 கிராம் வீதம் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலை கசக்கிப் பிழிந்து நீரை மட்டும் குடித்து பித்தத்தை வெளியேற்றிக் கொள்ளலாம்.

தூய கட்டை சந்தனத்தை அரைத்து நெற்றியில் இட்டுக் கொள்ளுதல், 27 முத்துக்கள் கோர்த்த மணிமாலையை கழுத்தில் அணிந்து கொள்வதும், கற்பூரம், சந்தனம், விளாமிச்சை வேர், வெட்டிவேர் ஆகியவற்றை குளிர்ந்த நீரில் அரைத்து, சிறிது நேரம் நெற்றியில் பூசி வைத்திருத்தலும், குளிர்ந்த நீரில் குளிப்பதும் உடற்சூட்டைக் குறைக்கக் கூடிய சில உபாயங்களாகும்.

இரவு நேரங்களில் குளிர்ச்சியான நிலவைப் பார்த்து அமர்ந்திருப்பதும், மனதிற்கு இன்பம் தரும் இசை, பாட்டு ஆகியவற்றைக் கேட்பதும், குளிர்ந்த நறுமணம் வீசக் கூடிய காற்றை அனுபவிப்பதும், கட்டுப்பாடுகளை விதிக்காது மனதிற்குப் பிடித்த நல்ல நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்தலும், சிறு குழந்தையின் மழலைப்பேச்சை கேட்டிருத்தலும் உடற்சூட்டை மனதின் மூலமாக உடலில் பரவியுள்ள பித்தத்தை குறைக்கக் கூடியவை என அஷ்டாங்கஹ்ருதயம் எனும் ஆயுர்வேத நூல் கூறுகிறது.

சந்தனாதி தைலம், சந்தனபலாலாகஷாதி தைலம், ஹிமஸாகர தைலம், அம்ருதாதி தைலம் போன்ற தைலங்களில் ஒன்றை தலையில் சுமார் அரை, முக்கால் மணிநேரம் ஊறவைத்து காலையில் குளித்து வரலாம். உடற்சூட்டைத் தணிக்கக்கூடிய சிறந்த ஆயுர்வேத தைலங்கள் இவை.

உடற்சூட்டைக் குறைப்பதற்கான தைலதாரா எனப்படும் தலையில் மூலிகை தைலத்தை தாரையாக ஊற்றும் சிகிச்சை முறை, நஸ்யம் எனப்படும் மூக்கில் விடப்படும் மூலிகைத் தைலங்கள் போன்ற சிகிச்சை முறைகளால் நீங்கள் உங்களுடைய உயரத்திற்கேற்ற உடலைப் பெறலாம்.

உண்ணும் உணவானது நன்றாக உடலில் சேர்ந்து ஆரோக்கியத்தை மேம்படுத்தும். இவை அனைத்தும் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளில் இன்று நன்றாக செய்யப்படுகின்றன.

# சட்டத்தரணிகள் பதில் நீதவான்களாக கடமையாற்ற அனுமதி இல்லை

## பிரதம நீதியரசர் அறிவிப்பு

(கொழும்பு)

சட்டத்தரணிகள் பதில் நீதவான்களாக கடமையாற்ற முடியாது என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார்.

நீதவான் அல்லது பதில் நீதவான்கள் கடமைக்கு சமூகமளிக்காத நேரங்களில் சட்டத்தரணிகளை பதில் நீதவான்களாக நிய மிக்கும் நடைமுறையை ரத்து செய்வதாக பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

நீதியரசர்களான ஈவா வன சுந்தர பிரியந்த ஜயவர்தன மற்றும் பிரதம நீதியரசர் அடங்கிய நீதியரசர் குழாமின் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வத்துபிட்டிவல அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் பெண் வைத்தியரான ஏ. மல்லிகா குணரட்ன என்பவரினால் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதம நீதியரசர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பூர்ணா குமாரி செனவிரட்ன என்ற பெண் சட்டத்தரணி பதில் நீதவானாக கடமையாற்றிய போது தம்மை தேவையின்றி விளக்க மறியலில் வைத்ததாக வைத்தியர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நிட்டம்புவ பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி சுசந்த மற்றும் மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் ஆனந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் பணியை இடைநிறுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்க மறியலில் தடுத்து வைக்க அவசியமற்ற சிறு குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த வைத்தியரை, எதேச்சாதி கார போக்கில் கைது செய்து விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதவானாக கடமையாற்றிய சட்டத்தரணி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையானது பாரதூரமானது என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட மக்களின் பணத்தில் சம்பளம் பெற்றுக்கொள்ளும் பொலிஸார் இது விடயத்தில் நடந்து கொண்ட விதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

பொதுமக்களை பொலிஸார் அடிமைகளாக நடத்தக்கூடாது. வைத்தியர் ஒருவருக்கு இவ்வாறு அநீதி இழைக்கப்பட்டால் சாதாரண பொதுமக்கள் தொடர்பில் எவ்வாறு பொலிஸார் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவார்கள்?

பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளன என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் நேரக் குறைப்பு

## மாதிரி வினாத்தாள் நவம்பரில் வெளிவரும்

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஒரே ஒரு வினத்தாளுடன் ஒன்றரை மணித்தியாலங்கள் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புலமைப் பரிசில் பரீட்சை இரண்டு வினாத்தாள்களுடன் இரண்டு மணி பதினைந்து நிமிடங்கள் நடைபெற்றன. எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு முதல் ஒன்றரை மணித்தியா லமே பரீட்சை நடைபெறும்.

இரண்டு வினாத்தாள்களுக்கு பதிலாக இனிமேல் ஒரே வினாத்தாள் மட்டுமே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் மாதிரி வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு நவம்பர் மாதம் சகல பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப்படவுள்ளன.

# வெளிநாட்டு நாணயங்களுடன் விமான நிலையத்தில் கைது

70 இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டுசெல்ல முயன்ற சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 1.45 மணி அளவில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் சிங்கப்பூர் நோக்கிச் செல்லவிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஊரியான் கிராமத்தில் வீடு கையளிப்பு



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஊரியான் கிராமத்தில் அவுஸ்ரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் ஆகியவற்றின் நிதியுதவியுடன் யு.என் கபிரெட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளில் பூர்த்தியடைந்த வீடு ஒன்று நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான உட்கட்டுமான அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிநிதிகள் டெறி, டெபுசா ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த வீட்டை பயனாளியிடம் கையளித்தனர்.

யு.என் கபிரெட் நிறுவனத்தால் மேற்படி கிராமத்தில் தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 41 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பூர்த்தி செய்யப்பட்ட வீடு ஒன்றே பயனாளியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு கொழும்பில் மாடி வீடுகள்

(கொழும்பு)

கொழும்பு உருகொடவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "புறதொற செவன" குடியிருப்புத் தொகுதி பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

34 வீடுகளைக் கொண்ட 4, இரண்டு மாடிக்கட்டடங்கள் பாதுகாப்புச் செயலாளரால் திறந்து வைக்கப்பட்டன. குறைந்த வருமானம் பெறும் நிலையில் வாழும் குடும்பங்களுக்கு இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.


இவ்வீடுகள் முறையான சுகாதார வசதிகள் உட்பட அனைதது வசதிகளையும் கொண்டவை.

மேலும் இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் இவ்வருடத்தில் 20000 வீடுகளைக் கொண்ட 5000 வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அவற்றில் பெருந்தொகையான பகுதிகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஸான் டி சில்வா, மேலதிக பணிப்பாளர் நாயகம் பிரிகேடியர் சமந்த ஜயசுந்தர, நகர மீளுருவாக்க திட்டத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் ரன்ஜித் சமரசிங்க, மற்றும் பெருந் திரளான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வறட்சியை தாங்கும் பப்பாசி முழங்காவிலில் செய்கை

(கொழும்பு)



கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் 80 பப்பாசி செய்கையாளர்களுக்கு தலா 170 பப்பாசி கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய பிரதி பணிப்பாளர் அ.செல்வராசா நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

பப்பாசி கன்றுகள் வழங்கு வதற்காக 100 பப்பாசி செய்கை யாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 80 பயனாளிகளுக்கான பப்பாசக் கன்றுகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பழச்செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையின் கீழ் இந்த பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட பப்பாசிக் கன்றுகளை பயிரிடும் நடவடிக்கையை பயனாளிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வறட்சியை எதிர்கொள்ளத்தக்க நீர்ப்பாசன முறைகளை (தூவல் நீர்ப்பாசனம்) பின்பற்றி பயனாளிகள் பப்பாசி பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், மிகுதி 20 பயனாளிகளுக்கான பப்பாசி கன்றுகள் எதிர்வரும் வாரம் முதல் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு உற்பத்தித்திறன் பொதுச்சேவை அலுவலகம் என்பன வடமாகாண பிரதம செயலாளருடன் இணைந்து பொதுச்சேவை அலுவலர்களுக்கான உற்பத்தித்திறன் அதிகரிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஒன்றை நேற்று யாழ். நூலகத்தில் அமைந்துள்ள வடமாகாண சபை தலைமையில் நடைபெறுவதையும். இச் செயலமர்வில் வடமாகாண அமைச்சின் செயலாளர், திணைக்களத் தலைவர்கள் பங்குபற்றுவதையும். காணலாம. (படங்கள்: பா.பார்த்தீபன்)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானம்** **பகுதி I**

1) காபோவைதரேற்றின் சமிபாட்டு இறுதி விளை பொருள்
1) கொழும்பமிலம், கிளிரரோஸ் 2) சுக்குரோசு
3) குளுக்கோசு 4) அமினோ அமிலம்

2) குளமொன்றில் வாழும் எல்லாத் தாவர விலங்கு குடித்தொகையும் ஒன்றாகக் கருதினால்
1) இனம் எனப்படும் 2) சாகியம் எனப்படும்
3) சூழல் தொகுதி எனப்படும் 4) ஒன்றியவாழிகள் எனப்படும்

3) சுகதேசி ஒருவரின் சிறுநீரில் காணப்படாத பாதார்த்தம்
1) குளுக்கோசு 2) குருதிக்கலம்
3) யூரியா 4) உப்பு

4) தாவரமொன்றின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன
- பூக்கள் தோன்றாது,
- வித்துக்கள் உருவாகும்
- வித்து வித்துறையால் மூடப்பட்டிருக்கவில்லை

மேலுள்ள இயல்புகள் கொண்ட தாவரம்
1) சைக்கஸ் 2) இஞ்சி 3) பன்னம் 4) ஈரப்பலா

5) வாழுகின்ற இடத்திற்கு ஏற்ப தாவரங்கள் பல்வேறு இசைவாக்கங்களை காட்டுகின்றன. கடற்கரையில் படர்ந்து வளரும் இவ்வாறான இசைவாக்கங்கள் எவ்வகையான சூழலில் வாழ்வதற்கானது?
1) அதிக சூரிய ஒளி 2) அதிக காற்று
3) மண்ணில் அதிக உவர்த்தன்மை 4) நீரைத் தேக்கி வைக்காத மண்

6) சுவாசப்பைச் சுற்றோட்டத் தொகுதியில்
1) இதயத்திலிருந்து ஒட்சிசனேற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும்
2) இதயத்திலிருந்து ஒட்சிசனேற்றப்படாத குருதியைக் கொண்டு செல்லும்
3) இதயத்திற்கு ஒட்சினேற்றப்பட்ட குருதியைக் கொண்டு வரும்
4) ஒட்சிசனேற்றப்பட்ட குருதியை தொகுதிப் பெருநாடி கொண்டு செல்லும்

7) மனிதக் காதில் உள்ள கட்டமைப்புகளும் அவற்றின் தொழில்களும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள கட்டமைப்புகளுக்கு பிழையாக குறிக்கப்பட்டுள்ள தொழில்


| கூட்டமைப்பு | ஆற்றும் தொழில் |
|---|---|
| 1) ஊத்தேக்கியாவின் குழாய் | நடுச்செவி, புறச்சூழலுக்கிடையிலான அமுக்கத்தை சமப்படுத்தும். |
| 2) செவிசிற்றென்புகள் | நடுக்காதின் வன்மையைப் பேணும் |
| 3) அரைவட்டக்கால்வாய் | உடலை சமநிலையில் வைத்திருக்க உதவும் |
| 4) நத்தைச்சுருள் | ஒலித்தூண்டல்களைப் பெறும் |

8) குருதிக்கலமொன்றின் முற்பக்கத் தோற்றத்தை, பக்கத் தோற்றத்தை அருகிலுள்ள படங்கள் காட்டுகின்றன. இக்காலத்தினால் ஆற்றப்படும் தொழில்





1) உடலினுள் புகும் கிருமிகளை விழுங்கும்
2) பிறபொருள் எதிரிகளை உருவாக்கும்
3) குருதியுறைதலுக்கு உதவும்
4) ஒட்சிசனை உடல் முழுதும் கொண்டு செல்லும்

9)




படத்தில் காட்டப்பட்டிருப்பது
1) ஆவியுயிர்ப்பை பரிசோதனை ரீதியில் காட்டுவதற்கான மாதிரி அமைப்பாகும். உறையில் சேர்ந்துள்ள நீர் உப்புக்கள் அற்றதாகும்.
2) ஆவியுயிர்ப்பை பரிசோதனை ரீதியில் காட்டுவதற்கான மாதிரி அமைப்பாகும் உரையில் உப்புக்கள் கலந்த நீர் காணப்படுகிறது.
3) கசிவை காட்டுவதற்கான பரிசோதனை அமைப்பாவதுடன் உறையில் கனியுப்புக்கள் கலந்து நீர் காணப்படுகிறது.
4) கசிவைக் . காட்டுவதற்கான பரிசோதனை அமைப்பாவதுடன் உறையில் கனியுப்புக்கள் அற்ற நீர் காணப்படுகிறது.

10) உயிர்க்கலத்தில் நடைபெறும் பிரிகை ஒன்றைக் கீழே காணலாம். இம்முறையில் பிரிகையடையாத கலம் பின்வருவ்னவற்றுள் எது?




1) புணரிக்கலங்கள் பெருக்கமடையும் போது நடைபெறுகின்றது.
2) புணரிகள் ஆக்கத்தின் போது
3) உடல்புண்கள் குணமடையும் போது நடைபெறும்
4) இறந்த உடல்கலங்கள் இடமாற்றம் செய்யும் போது நடைபெறும்

11) அங்கிகளை உள்நிலைக்காப்பு மேற்கொள்ளப்படும் இடம்
1) விலங்கியல் பூங்கா 2) தாவரவியல் பூங்கா
3) பாதுகாப்புவனம் 4) விலங்கு காப்பகம்

12) ஊசிக்கு நூல் கோக்கும் போது உதவும் நரம்புத் தொகுதியுடன் தொடர்பான உறுப்புகள்
1) மூளையம் 2) முண்ணான்
3) நீள்வளைய மையவிழையம் 4) மூளி

13) ஒரு மூலகம் 3 சக்தி மட்டங்களைக் கொண்டது. இறுதிச் சக்தி மட்டம் ஒரு இலத்திரனைக் கொண்டது. கருவில் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 12 ஆகும். இதன் திணிவு எண்
1) 12 2) 23 3) 11 4) 1

14)

| கரைசல் | $P^H$ பெறுமானம் |
|---|---|
| P | 2 |
| Q | 3 |
| R | 9 |
| S | 11 |

பல கரைசல்களின் $P^H$ பெறுமானம் கீழே தரப்பட்டுள்ளது. அதிகளவு அமில்த்தன்மை கொண்ட கரைசல்
1) P 2) Q
3) R 4) S

15) X, Y உலோகங்கள் மூன்றின் பிரித்தெடுப்பு முறை கீழே தரப்பட்டுள்ளது.
X - உலோகத் தாதை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றி பெறப்படும்
Y - உருகிய குளோரைட்டு மின்பகுத்து பெறப்படும்.
Z - உலோகத்தை மாசுக்களை அகற்றிப் பெறுதல்.
தாக்குத்திறன் அடிப்படையில் இவ்வுலோகங்களை படிமுறைப்படுத்தும் போது பெறப்படும் ஒழுங்கு
1) Z,X,Y 2) Y,X, Z
3) X,Y,z 4) Z, Y, X

16) இயற்கை இறப்பரில் ஐசோப்பியன் என்னும் சேதனச் சேர்வை காணப்படுகிறது. அதன் சூத்திரத்தை இவ்வாறு காட்டலாம். வல்கனைஸ் படுத்தப்பட்ட இறப்பரை தகனமடையச் செய்தால் வெளியேறும் வாயு


```
H   CH3 H  H
|    |  |  |
C  = C - C=C
|          |
H          H
```

1) காபனீரொட்சைட்டு மாத்திரம் 2) காபனீரொட்சைட்டு, நீர்
3) நீர் மாத்திரம் 4) காபனீரொட்சைட்டு, நீர் கந்தவீரொட்சைட்டு


17) பின்வரும் எந்த ஒட்சைட்டு சேர்வைக்கு பினோப்தலின் சேர்த்தபோது இளம் சிவப்பு நிறம் தோன்றும்.
1) $Na_2O$ 2) $CO_2$ 3) $SO_2$ 4) $NO_2$

18) மெழுகு தகனமடையும் போது தோன்றும் விளைபொருள் சுண்ணாம்பு திரவத்தினூடாகச் செலுத்தி வெளியகற்றுவதற்குப் பொருத்தமான அமைப்பு

A - தகன விளைபொருள B - குமிழிடச் செய்யப்பட்ட பின்னர் வெளியகற்றப்படும் வாயு




19) மக்னீசியம் ஐதான ஐதரோக்குளோரிக்கமிலத்துடன் நடைபெறும் தாக்கத்தின்போது வெளியேறும் வாயுவின் கனவளவு அதற்கு எடுத்த நேரத்தின் எதிராக வரையப்பட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




1) 40 செக்கனின் பின்னர் சீராக வாயுக்குமிழிகள் வெளியேறியுள்ளன.
2) 40 செக்கனில் தாக்கம் நிறைவுபெற்றுள்ளது.
3) தாக்கவீதம் எப்பொழுதும் மாறிலியாகும்.
4) 40 செக்கனின் இறுதியில் ஐதரோகுளோரிக் கமிலம் முடிவடைந்துள்ளது.

20) பல்லினக் கலவையாக அமைவது
1) அடைக்கப்பட்ட போத்தலிலுள்ள சோடாப்பானம்
2) இயற்கையாக உள்ள நீர்
3) கருங்கல் துண்டு
4) பொற்றாசிய பரமங்கனைற்றுக் கரைசல்.

21)





இரச நிரலினால் கண்ணாடிக்குழாயில் வளிநிரல் ஒன்றுசிறைப்படுத்தப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. குழாய் நிலைக்குத்தாக வைக்கப்பட்டுள்ளபோது வளி நிரலின் மீது தொழிற்படும் அமுக்கம்.

1) இரசநிரலினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.
2) இரசநிரலினால், வணிமண்டல அமுக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.
3) வணிமண்டல அமுக்கத்தினால் மட்டும் ஏற்படுத்தப்பட்டதாகும்.
4) வணிமண்ட அமுக்கத்தை இரச நிரலினால் ஏற்படுத்தப்படும் அமுக்கத்திலிருந்து குறைப்பதனால் பெறப்பட்ட அமுக்கத்திற்குச் சமனாகும்.

22) 1 mol $dm^{-3}$ செறிவு கொண்ட குளுக்கோசு ($C^6H^{12}O^6$) கரைசலை $500cm^3$ தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான குளுக்கோசு திணிவு கிராமில் (C =12, H =1, O =16)


1) 500 2) 90 3) 180 4) 60

23) இளநீரிலிருந்து வினாகிரி தயாரிக்கும் முறையை பாய்ச்சல் கோட்டுப்படம் மூலம் காட்டப்பட்டுள்ளது.




a,b வெற்றிடங்களுக்குப் பொருத்தமானது முறையே

1) இன்வடேசு, எதைல் அல்ககோல்
2) எதைல அல்ககோல், அசற்றோபக்டர்
3) மெதைல் அல்ககோல், சைமேசு
4) அசற்றோபக்டர்

24) 


தூய ஆணியினைச் சுற்றி உலோகங்கள் சுற்றப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. இவற்றுள் இரும்பு ஆணிக்கு கதோட்டும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

1) A 2) B 3) C 4) D

25) அலுமினிய உலோகப் பாத்திரங்களில் உலோக அரிப்பைத் தடுப்பதற்கு அவற்றின் மீது ஒட்சைட்டு படலம் ஒன்று தோற்றுவிக்கப்படும். இதன்போது

1) மின்பகுபொருளாக அமிலம் சேர்க்கப்பட்ட நீரும் அனோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
2) மின்பகுபொருளாக அமிலம் சேர்க்கப்பட்ட நீரும் கதோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
3) மின்பகுபொருளாக செப்புசல்பேற்றுக் கரைசலும் கதோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
4) மின்பகுபொருளாக சோடியம் குளோரைட்டு கரைசலும் அனோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.


26) பின்வரும் இலத்திரனியல் துணைப்பாகங்களில் விரியலாக்கியாக தொழிற்படுவது




27) 750 w வலுவைக் கொண்ட மின் அழுத்தி 3 நிமிட நேரம் சட்டை அழுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டதாயின் அது வெளியிட்ட சக்தி


1) 750 x 3 x 60J 2) 750 x 3J 3) $\frac{750 \times 60J}{3}$ 4) $\frac{750 \times 3J}{60}$

28) O என்னும் ஒளி முதலிடத்திருந்து வெளியேறிய ஒளிக்கதிர்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தெளிப்படைந்ததாயின், A, B இல் காணப்படுவது.





1) குழிவு வில்லை, குவிவுவில்லை
2) குவிவாடி, குழிவுவில்லை
3) குவிவுவில்லை, குழிவுவில்லை
4) குழிவாடி, குவிவுவில்லை


29) மையப்பூச்சிய கல்வனோமானியுடன் தொடர்புபடுத்தப்பட்ட கம்பிச் சுருளொன்றை படம் காட்டுகின்றது. கல்வனோமானி தூண்டப்படுவது பற்றிய பிழையான கூற்று.




1) காந்தத்தின் வடமுனைவு சுருளை நோக்கி அசைக்கும்போது தாண்டல் மின்னோட்டம் உருவாகும்.
2) காந்தத்தின் தென்முனைவு சுருளை நோக்கி அசைக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகும்.
3) சுருளினுள் காந்தத்தை நிலையாக வைத்திருக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகாது.
4) காந்தத்தை சுருளினுள் அசையாது வைத்து சுருளை அசைக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகாது.

30) ரு குழாயினுள் இரசத்துடன் இடப்பட்ட நீர், மண்ணெண்ணெய் என்பவற்றில் அமைவை சரியாகக் காட்டும் உரு





31) 


நான்கு பரிசோதனைக் குழாய்களுக்கு நீர் இடப்பட்டுள்ள முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது. குழாயின் மேல் முனையில் வாயை வைத்து ஊதும் போது கூடிய சுருதியுடன் ஒலி எந்தக் குழாயில் உருவாகும்.

1) A 2) B 3) C 4) D

32) NOT தருக்கப்படலையின் தொழிற்பாட்டை சரியாகக் காட்டும் சுற்று





33) இரண்டு விசைகள் சமநிலையில் காணப்படும் சந்தர்ப்பமாக அமைவது

1) இரண்டு கால்கொண்ட வாங்கு நிலத்தில் ஓய்வாகக் காணப்படுதல்
2) இரண்டு மனிதர்கள் நீர்க்குற்றியை தோள்பட்டையில் வைத்து சுமந்து செல்லுதல்
3) பழம் ஒன்று மரத்தில் தொங்கி கொண்டிருந்தல்
4) கயிறு இழுத்தல் போட்டியில் ஒரு பக்கத்தை நோக்கி கயிறு அசைதல்.

34) சுனாமி தோன்றும் போது ஏற்படும் நீரலையின் வேகம் ஆழ்கடலில்


1) குறைவடைவதுடன் அலைநீளமும் கூடுகின்றது.
2) அதிகரிப்பதுடன் அலைநீளமும் கூடுகின்றது.
3) குறைவடைவதுடன் வீச்சம் பெரிய பெறுமானத்தைப் பெறும்
4) அதிகரிப்பதுடன் வீச்சம் பெரிய பெறுமானத்தை பெறும்.

35) ஆர்முடுகலுடன் பயணிக்கும் பொருளொன்றின் அசைவைக் காட்டும் வரைபு




36) இரண்டு பற்சில்லுகள் பொருத்தப்பட்டிருக்கும் முறை படம் காட்டுகின்றது. A சில்லில் 60 பற்களும் B சில்லில் 15 பற்சில்களும் உண்டு. A பற்சில்லு ஒருமுறை வலம் சுழியாக சுழலும் போது சில்லு B ஆனது

1) வலஞ்சுழியாக நான்குமுறை சுழலும்
2) வலஞ்சுழியாக இரண்டு முறை சுழலும்
3) இடஞ்சுழியாக நான்கு முறை சுழலும்
4) இடஞ்சுழியாக இரண்டு முறை சுழலும்




37) உராய்வு விசை தொழிற்படாத சந்தர்ப்பமாக அமைவது

1) இயங்கும் மோட்டார் வண்டியை நிறுத்த சாரதி தடுப்பை பிரயோகித்தல்
2) பனிப்பாறையில் சறுக்கும் ஒருவர் பாய்வதற்கு
3) மோட்டார் வண்டி பயணிக்கும் போது
4) நாம் நடக்கும்போது

38) முன்னேற்றம் அடைந்த நாடுகளில் மின்னை உற்பத்தி செய்ய கருச்சக்தி பயன்படுத்தப்படுகின்றது. இதிலுள்ள பிரதிகூலம்

1) இது எப்பொழுதும் விலைகூடிய முறையாகும்
2) கதிர்யக்க கழிவுகளை அகற்ற முடியாமல் இருத்தல்
3) உருவாக்கப்படும் மின்சக்தியை தூர இடங்களுக்குகொண்டு செல்ல முடியாமை
4) மூலவளம் காணப்படும் நாடுகளில் மாத்திரம் பயன்படுத்தப்படுதல்


39) விலங்குகளுக்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த ஓசோன், சிறந்த ஒட்சியேற்றியாகும். ஓசோன் அழிவை ஏற்படுத்தினாலும் ஓசோன் படையில் துளையேற்படுவதைப் பற்றி நாம் கவனத்திற் கொள்வதற்கான காரணம்

1) ஓசோன் துளையினூடாக வளியில் காணப்படும் வாயுக்கள் வெளியேறும்
2) ஓசோன் துளையினூடாக புவியில் உள்ள வெப்பசக்தி வெளியேறும்
3) ஓசோன் துளையினூடாக கழியூதக்கதிர்கள் புவிமேற்பரப்பை வந்தடையும்
4) ஓசோன் படையில்லாவிட்டால் நீர்வட்டம் ஒழுங்காகச் செயற்படாது

40) சூழல்பற்றிய மக்களிடம் காணப்படவேண்டிய சரியான மனப்பாங்கு

1) சூழல் எமக்குரியது
2) நாங்கள் சூழலுக்குரியவர்கள்
3) சூழலை எமக்கேற்ப மாற்றிக்கொள்ள முடியும்
4) சூழலிலிருந்து உயர் பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## பகுதி II

01) 


L. P வாயுவினால் இயங்கும் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்திக் கொண்டிருந்த சாரதி பாதைக்குக் குறுக்காக பாயும் சிறுவனைக் கண்டு தடுப்பை பிரயோகித்து வாகனத்தை நிறுத்தினான்.

1) அ) சிறுவனைக் கண்டதும் தப்பை பிரயோகித்தபோது சாரதியின் உடலில் தெறிவினை தொழிற்பட்ட முறையை பாய்ச்சல் கோட்டுப்படத்தின் மூலம் காட்டுக.

.......................................................................................

ஆ) இங்கு சாரதி பெற்ற தூண்டல், துலங்கல்களைக் குறிப்பிடுக.

தூண்டல் - ........................................

துலங்கல் - ........................................

## பலத்த சூறாவளியினால் தேர்முட்டி சேதம்



(கரணவாய்)

கரணவாய் கரவெட்டி பகுதிகளில் அண்மையில் பெய்த கடும் மழையுடன் வீசிய சூறாவளியினால் இமையாணன் தூவளி அம்மன் ஆலய தேர்முட்டியின் மேற்கூரை அள்ளுண்டு சேதமடைந்துள்ளது.

பலத்த காற்று வீசியமையால் இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளதாகவும் இப்பகுதிகளிலுள்ள பல வீடுகளும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# மாந்தை கிழக்கிலுள்ள புதிய கட்டடங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும்

## பிரதேச செயலர் தகவல்

(மாந்தை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட கட்டட நிர்மாணப்பணிகள் பல நிறைவு பெற்றுள்ளன. அவை விரைவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் என மாந்தை கிழக்கு பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

. இதன்படி சிறாட்டிக்குளம் அபிவிருத்திச் சங்கக்கட்டடம், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் 3இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

வேள்ட் விஷனின் 30இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் கரும்புள்ளியான் பொதுநோக்கு மண்டபம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பனவும் விநாயகபுரம் பகுதியில் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளி மற்றும் பொது மண்டபமும், மூன்று முறிப்பு கிராமத்தில் 11இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பொது நோக்கு மண்டபமும் மிக விரைவில் திறந்து வைக்கப்பட்டடு மக்கள் பாவனைக்கு வழங்கப்படவுள்ளன

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு பகுதி யுத்த அனர்த்தத்தின் போது அதிகம் பாதிக்கப்பட்டு அழிவுகளைச் சந்தித்திருந்த நிலையில் தற்போது அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப்பிரதேசம் அபிவிருத்தி கண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாகவே கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு போட்டிகளை நடாத்த ஏற்பாடு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கல் அபிவிருத்தி அமைச்சு திணைக்களம், நெக்டா நிறுவனம் மற்றும் ஒன்றிணைந்த நிறுவனங்களுடன் இணைந்து தேசிய மீனவர் மகாசம்மேளனம் நவமபர் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச மீனவர் தினத்தினை மிகவும் கோலாகல மாக கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மீன்பிடித்துறையில் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணருமுகமாக பல்வேறு திறமையுள்ள மீனவர்களின் பிள்ளைகளை பாராட்டுவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு ,

இதில் கட்டுரைப் போட்டி வயது 14 இற்கு மேல் சிரேஷ்ட பிரிவாகவும் போட்டிக்குரிய தலைப்புகளாக கடற்கரையை பாதுகாப்போம், பாரம்பரிய மீன்பிடிமுறைமை, இலங்கையில் நீர்நிலைகளின் அழகுக்காட்சி, புதிய உலகிற்கு ஏற்ற மீனவர் சமூகம் போன்றனவாகும். வயது 14 இற்கு கீழ் கனிஷ்ட பிரிவாக போட்டிக்குரிய தலைப்புகளாக கடற்கரையை பாதுகாப்போம். பாரம்பரிய மீன்பிடி முறைமை இலங்கையின் புதிய உலகிற்கு ஏற்ற மீனவர் சமூகம் போன்றனவாகும்.

மேலும் சித்திரப்போட்டியில் வயது 14 இற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரிவுக்குரிய தலைப்புகளாக சமுத்திரத்தை வெற்றி கொள்பவர்கள், மீன்பிடி துறை முகங்கத்தின் காட்சி, எமக்கு நன்மையளிக்கும் குளம், அழிவுக்குள்ளாக்கும் மீன்பிடி முறைமையினை ஒழிப்போம் போன்றனவாகும். 14 வயதுக்கு கீழ்பட்ட கனிஷ்ட பிரிவுக்குரிய போட்டிக் குரிய தலைப்பாக சிறுசூறா வளி, எமது மீனவர்கள் , மீன்பிடி இறங்குதுறையின் காட்சி, குளத்தின் அழகுக் காட்சி போன்றனவாகும்.

திறந்த போட்டியில் சித்திரம் மற்றும் கட்டுரைத் தலைப்புகளாக தயார் செய்யப்பட்ட தலைப்பை பயன்படுத்தலாம். வயது எல்லையற்ற கிராம மீனவர் அமைப்புக்களில் அங்கத்துவம் உள்ளவர்களே பங்கு கொள்ள முடியும்.

மீனவர் பாடல் போட்டியில் மாணவர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றலாம். கண்காட்சிக்கான அமைப்புப் போட்டியில் கிராமிய மீனவர் அமைப்பு மற்றும் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பல்வேறுபட்ட விடயங்கள் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்

இதற்கமைய மாவட்டத்தில் அனைத்து வெளிக்கள உத்தியோகத்தர்களையும் இவ்விடயம் தொடர்பாக அபிவிருத்தி மாவட்ட மீனவர் அமைப்பு கிராமிய அமைப்புக்களை அழைத்து கூடிய விரைவில் மீனவர்களின் பிள்ளைகளை அறிவுக்கு உற்சாகமூட்டி இதில் கலந்து கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு இவ் வேலைத் திட்டத்தினை சிறப்பாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.சித்திரம் மற்றும் கட்டுரை யுடன் விண்ணப்பப்படிவத்தை நவம்பர் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் பிரதம செயலாளர் தேசிய மீனவர் மகா சம்மே ளனம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மாளிகாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

# வீதிக்கு பெயர் சூட்டல் அதிகாரிகள் ஆராய்வு



வலி. மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வீதிக்கு பெயர் சூட்டுவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த வீதிக்கு பிள்ளையார் கோவில் வீதி எனப் பெயர் சூட்டுமாறு பொது மக்களின் கோரியமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன், பிரதேச கிராமசேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் . (48)

# அரச ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு இம்மாதம் முதல் வங்கிக் கணக்கில்

அரச ஓய்வூதியம் பெறுபவர்களின் மாதாந்த கொடுப்பனவுகள் இம்மாதம் தொடக்கம் வவுச்சர்களாக அனுப்பப்படாது நேரடியாக அவர்களின் ஓய்வூதியம் பெறும் வங்கிக் கணக்குகளுக்கே அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதனை அடுத்து வேறு பிரதேசங்களில் வசிக்கும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் அவர்கள் வதியும் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக அறிவுறுத்தல்கள் குறித்து பிரதேச செயலகங்களினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஒப்புதல் ஓய்வுதியர்களிடம் பெறப் பட்டுள்ளது. ஓய்வூதியர்கள் மாதாந்தம் வவுச்சர் மூலமாக பணம் பெறும் நிலையில் அவர்களுக்கு இறப்பு சம்பவிக்கும் போது அவர்களின் ஓய்வூதியம் பெறப்படாது மீளவும் பிரதேச செயலகத்திற்கு திரும்புகின்றது. ஆனால் தற்போது அவர்களுக்கு வவுச்சர் இன்றி வங்கிக் கணக்குகளுக்கு பணம் அனுப்பப்படும் போது அவர்களுக்கு இறப்பு சம்பவிப்பது பிரதேச செயலகத்திற்கு தெரியவராது உள்ளது. இதனால் தொடர்ந்து அவர்களின் கணக்கிற்கு ஓய்வூதியம் வைப்பில் இடப்பட்டு கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக குறித்த பிரதேச செயலகத்திற்கு ஓய்வுதியத்தினை மாற்றுமிடத்து அவர்களுக்கு மரணம் சம்பவிக்குமிடத்து குறித்த பிரதேச செயலகத்திற்கு தகவல் அனுப்பப்படும்.இதன் மூலம் ஓய்வூதியம் வழங்குவதை மீள் பரிசீலனை செய்ய முடியும்.

அதன்பின்னர் ஓய்வூதியர்களின் உரித்தாளர்களான மனைவி, கணவன், பிள்ளைகளுக்கு குறித்த ஓய்வூதியத் தினை சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு வழங்க முடியும் எனவும் இதன்மூலம் ஓய்வூதிய துஷ்பிரயோகத்தை தடுத்து நிறுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (54)

# இலங்கை இலக்கிய பேரவையினால் விருது பெறும் நூல்களின் விபரம்

இலங்கை இலக்கியப் பேரவையால் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்களில் சிறந்த நூல்களாக தெரிவுசெய்யப்பட்டு விருது பெறும் நூல்கள் சான்றிதழ் பெறும் நூல்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

### விருது பெறும் நூல்கள்

காவியம்- எல்லாளன் காவியம் (ஜின்னாஹ் ஷரிபுதீன், கொழும்பு), ஆய்வு போர்க்கால சிங்கள இலக்கியங்கள் (எம்.சீ. ரஸ்மீன், இராஜகிரிய), கவிதை- எழுதாத ஒரு கவிதை (த.ஜெயசீலன், யாழ்ப்பாணம்), நாவல்- வேப்பமரம் (கலையார்வன் யாழ்ப்பாணம்), சிறுகதை- அம்மாவின் உலகம் (த.கலாமணி அல்வாய்), பல்துறை-ஜன்னலைத்திற- (அ.ஸ. அகமட் கியாஸ் அக்கரைப் பற்று), அறிவியல- சுதேச மருத்துவம் பற்றிய தமிழ் நூல்கள் (கலாநிதி க.நாகேஸ்வரன் கொழும்பு), சிறுவர் இலக்கியம் அமைதிப்பூங்கா (யோ.யோண்சன்.ராஜ்குமார், யாழ்ப்பாணம்), நாடகம்- சூடிக் கொடுத்த சுடர் கொடி (நாட்டிய நாடகம் திருமதி.ஜெயக்குமாரி கந்தவேள், கொக்குவில்), சமயம்-திருத் தலங்கள் பதினாறு -(பொ.சிவப்பிரகாசம்,கொழும்புத்துறை), மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழுக்கு) சந்தனமரம் கலாபூஷனம் அ.மு. பாறூக் மருதமுனை).

### சான்றிதழ் பெறும் நூல்கள

காவியம்- அந்தோனியார் காவியம் (மு.அருட்பிரகாசம், பாஷையூர்), ஆய்வு- நாகர் எழுவனனி(ஞா.ஜெகநாதன், செட்டிக்குளம்), கவிதை-பூப்படைந்த பூக்கள் (எஸ்.ஜலால்மீன், ஒலுவில்), நாவல்- குடிமைகள் (தெணியான் வல்வெட்டித்துறை), சிறுகதை- என்னடா குலமும் கோத்திரமும்- எஸ்.முத்துமீரான் நிந்தவூர்), பல்துறை- திருப்பத்திற்கான தேடல்கள் (செ.அன்புராசா, கொழும்புத்துறை (அறிவியல்- குழந்தை மருத்துவம் (வைத்திய கலாநிதி சே.சிவசண்முகராசா, யாழ்ப்பாணம்), சிறுவர இலக்கியம்- பளிங்கு மாளிகை (முகல்வண்ணன் கல்முனை), நாடகம்-இளையோர் இசை நாடகம் (த.கலாமணி அல்வாய்), சமயம்-பக்தி அனுபவம்(கலாநிதி க.நாகேஸ்வரன், கொழும்பு), மொழிபெயர்ப்பு- வேற்று மொழியிலிருந்து தமிழுக்கு (தரமானவை கிடைக்கப்பெறவில்லை)

விருது சான்றிதழ்வழங்கல் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் அறிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

## 10 வீத உட்கட்டுமான பணிகள் 6 மாதத்திற்குள் முடிவடையவேண்டும்

### மோடி உத்தரவு



இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரும் நிதியாண்டின் இறுதிக்குள் 10 சதவீத உட்கட்டமைப்பு பணிகளை முடிக்க வேண்டும் என மத்திய அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கான முதற் கட்டமாக 6 மாதங்களுக்குள் மொத்த உட்கட்டமைப்பு இலக்கில் 10 சதவீதத்தை பூர்த்தி செய்து விட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். இந்தப் பணிகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு அமைச்சகத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பை அவர் திட்டக் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

இதன் மூலம் டிஜிட்டல் இந்தியா, ஸ்கில் இந்தியா எனும் தன் கனவுகளை செயற்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த பணிகள் விரைந்து நிறைவேற்றப்படுவதை, தனக்கு உடனுக்குடன் எழுத்துப்பூர்வமாக தர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை ஒழிக்க 40 நாடுகள் ஒத்துழைக்க தயார்

### அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவிப்பு



கொடூர அமைப்பாக வளர்ந்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்ட அமெரிக்கா தலைமையிலான நாடுகள் முயன்று வருகின்றன.இந்நிலையில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பை பெற அமெரிக்கா தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இதன்முதற்கட்டமாக அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுற்று பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்த சுற்று பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்றும், ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக போராட 40 நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் கெரி குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைக்கு 10 அரபு நாடுகள் உட்பட 40 நாடுகள் ஆதரவு வழங்கியதுடன், இராணுவ ஒத்துழைப்பு வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஜோன் கெரியின் இந்த சுற்று பயணத்தில் முக்கிய அம்சமாக 10 அரபு அரசாங்கங்கள் ஜெட்டா நகரில் வைத்து, ஐ.எஸ். ஐ.எஸ தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட தங்களது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதி அளித்து கையெழுத்திட்டுள்ளன.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்டுகள், எகிப்து, ஈராக், ஜோர்தான், லெபனான், பஹ்ரைன், குவைத், ஓமன் மற்றும் கட்டார் ஆகிய 10 அரபு நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன.

## லிபியா கடல் பகுதியில் விபத்து படகுகள் மூழ்கி 700 பேர் பலி

லிபியா கடல் பகுதியில் நிகழ்ந்த 2 வெவ்வேறு சம்பவங்களில் படகுகள் மூழ்கி 700 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக குடியேற சிரியா, பலஸ்தீனம், எகிப்து, சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்டோரை மனித கடத்தல் கும்பல் ஒன்று லிபியா கடல் பகுதி வழியாக படகில் அழைத்துச் சென்றது. மால்டா அருகே ஒரு படகிலிருந்து, மற்றொரு படகிற்கு 500 பேரையும் கடத்தல் கும்பல் மாற்ற முயன்றுள்ளது. அந்த படகு மிகவும் சிறியதாக இருந்ததால், அதில் ஏறு வதற்கு 500 பேரும் மறுத்து விட்டதாக கூறப்படுகிறது.

இதனால், மற்றொரு படகில் இருந்த கடத்தல் கும்பல் ஆத்திரமடைந்து, 500 பேர் இருந்த படகை தகர்த்து மூழ்கடித்துச் சென்று விட்டது.

தண்ணீரில் தத்தளித்த இருவரை அவ்வழியே சென்ற சரக்கு கப்பல் மாலுமிகள் கடந்த வியாழக்கிழமை மீட்டு இத்தாலிக்கு அழைத்துச் சென்றனர். மேலும் 9 பேரை கிரேக்கம், மால்டா நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் காப்பாற்றி அழைத்துச் சென்றன. இந்த சம்பவத்தில் 500 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அதே போன்று, லிபியாவின் திரிபோலியிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் உள்ள கடல் பகுதியில 240 இற்கும் மேற்பட்டோரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த் 200 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

40 பேர் மீட்கப்பட்டுள்ளதாக லிபியா கடற்படை செய்தித் தொடர்பாளர் காசிம் அயூப் தெரிவித்தார்.

கடற்பரப்பில் ஏராளமான சடலங்கள் மிதப்பதாகவும், தேவையான உபகரணங்கள் தங்களிடம் இல்லாததால் மீட்புப் பணியை துரிதமாக மேற்கொள்ள முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போட்டியிடுகிறார் ஹிலாரி



அமெரிக்காவில் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் போட்டியிடவுள்ளார்.


அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் ஆளும் ஜனநாயக கட்சியில் முக்கியத் தலைவராகவுள்ளார்.

அமெரிக்காவின் அயோவா மாகாணத்தின் டெஸ் மோய்னஸ் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஜனநாயக கட்சி பிரசார கூட்டத்தில் ஹிலாரி கிளிண்டன் கலந்துகொண்டார்.

அப்போது அவரிடம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்புவது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் என்றாலே பலரும் உற்சாகமாகி விடுகிறார்கள்.

எனக்கும் பிரசாரத்தின்போது இது போன்ற உற்சாகம் வந்து விடுகிறது என்று குறிப்பிட்டார்.

## 650 அடி மலை உச்சியிலிருந்து பேருந்து கவிழ்ந்து 26 பேர் பலி



பெருநாட்டில் 650 அடிமலை உச்சியிலிருந்து பஸ் உருண்டது. இந்த பயங்கர விபத்தில் 6 குழந்தைகள் உட்பட 26 பேர் பலி யானார்கள். 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

பெருவிலுள்ள சால்ஹான்கா நகரில் ஒரு கோயில் திருவிழாவில் பங்கேற்பதற்காக, பியூகியோ நகரில் இருந்து பக்தர்கள் ஒரு பேருந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டனர். மலைப் பாதையில் கோட்டாரஸ் என்ற இடம் அருகே ஒரு குறுகிய வளைவில் பேருந்து திரும்பிய போது, பேருந்து திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஓடியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் 650 அடி ஆழ மலை பள்ளத்தில் உருண்டது.

பேருந்தில் இருந்தவர்கள் அலறித்துடித்தனர். இந்தக் கோர விபத்தில், 6 குழந்தைகள் உட்பட 26 பேர் பரிதாபமாக பலியானார்கள். 30 பேர் படுகாயம் அடைந்தனர். பலியானோரின் உடல்களை பொலிஸார் மீட்டனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பழங்குடி மக்களுக்காக குடிசைக்கு மாறிய பிரதமர்



பழங்குடி மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதியின் படி தனது அலுவலகத்தை குடிசைக்கு மாற்றியுள்ளார் அவுஸ்ரேலியப் பிரதமர் டோனி அபோட். கடந்தாண்டு அவுஸ்ரேலியப் பிரதமராக பதவியேற்ற டோனி அபோட், ஆண்டுதோறும் ஒரு வார காலம் பழங்குடி இன மக்கள் வாழும் பகுதியில் தனது பிரதமர் அலுவலகத்தை மாற்றி செயற்படப் போவதாக அறிவித்தார்.

அதன்படி, நேற்று முதல் இன்னும் ஒரு வார காலத்திற்கு, மேற்கு அவுஸ்ரேலியாவின் டார்வின் நகரிலிருந்து ஆயிரம் கி.மீ தொலைவிலுள்ள நுலுன்பை என்ற இடத்தில் கூடாரம் அமைத்து தங்கி தனது பணிகளை செய்யவுள்ளார் டோனி அபோட்.


இவ்வாறு தற்காலிக அலுவலகத்தில் இருந்தாலும், தலைநகர் கான்பெராவுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கப்போவதாகவும், ஏதேனும் அவசியம் ஏற்பட்டால் அங்கிருந்து தலைநகர் திரும்பப்போவதாகவும் அபோட் தெரிவித்துள்ளார்.

### பயனர்களை...

இவ்வழக்கு பற்றி கருத்து கூறிய மக்ஸ் நாம் அனைவரும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தவே விரும்புகிறோம். ஆனால் அந்தரங்கம் பற்றிய கவலையும், அச்சமும் இன்றி பயன்படுத்த விரும்புகிறோம். இப்போது நம் முன்னால் இரண்டு தேர்வுகள் உள்ளன, கற்காலத்திற்கு திரும்பி செல்வது அல்லது எதிர்த்துப் போராடும் நடவடிக்கையில் இறங்குவது. நாங்கள் இரண்டாவதை தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்கிறார்.முதலாளித்துவ அமைப்பை தக்கவைத்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும், அமைப்புகளும், அதன் ஆன்மாவான லாபத்திற்கு எதிராகவும், உலகளாவிய கலாசார தாக்குதலுக்கும் எதிராக ஒரு துரும்பையும் அசைத்து விடாது. அதனால் தான் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமின்றி நமது நாட்டின் தகவல் தொடர்பு அமைச்சகம் போன்ற நெறிப்படுத்தும் அமைப்புகள் பேஸ்புக் தனது பயனர்களின் அந்தரங்கத்தை மீறுவதை கண்டும் காணாமல் விட்டுவிடுகின்றன. மக்ஸ் செரிம்ஸ் குழுவினரும் கூட விரைவிலேயே சட்ட வழிமுறைகளில் இதற்கு தீர்வு இல்லை என்பதைப்புரிந்து கொள்ளக்கூடும். இதற்கான தீர்வு பேஸ்புக்கின் மெய்நிகர் உலகிற்கு வெளியே மெய் உலகில் சமூகத்திடம் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதிலும், முதலாளித்துவ லாபவெறியின் அல்கரிதம் நம்மை அடிமைப்படுத்துவதற்கு எதிராக போராடுவதிலும் தான் உள்ளது. (நன்றி: வினவு)

# தையல் பயிற்சி நிலையம் வேலணையில் திறந்து வைப்பு

## சுயதொழில் முயற்சிக்கு ஊக்குவிப்பு



வேலணைப்பிரதேசத்தில் (இலங்கை வங்கிக்கிளைக்கு முன்பாக) பெண்களுக்கான தையல பயிற்சி நிலையத்தினை நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் தீவகப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) திறந்து வைத்தார். இப்பயிற்சி நிலையத்தினூடாக ஆறுமாதகால தையல் பயிற்சியினை பெறுவதோடு பயிற்சிக்காலத்தில் சிறு ஊக்குவிப்புத்தொகையுடன் சிறந்த தையலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெறுமென்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத தெரிவிக்கையில்,

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள மற்றும் வறிய குடும்பங்களை சார்ந்த வேலையற்ற யுவதிகளிற்காகவும் இப்பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்தோடு சரியான முறையில் பயிற்சியினை பெறுவதனூடாக எதிர்காலத்தில் தையலினை சுயதொழிலாகவோ அல்லது தையல் சார்ந்த அரச வேலைத் தளங்களில் வேலைவாய்ப்பினையோ பெற்றுக்கொள்ள முடியும்.அத்துடன் தமது குடும்ப வறுமையினை முழுவதும் தீர்க்காவிடினும் எதிர்காலத்தில் தையலினை சுயதொழிலாக மேற்கொளவதன் ஊடாக குடும்ப வாழ்க்கைச் செலவின் சுமையினை தங்களால் குறைக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத்தலைவர் சிவராசா (போல்) கலந்து கொண்டார்.

# உற்பத்தித்திறன் அதிகரிப்பு யாழ்ப்பாணத்தில் செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

'உற்பத்தி திறன்கள் அதிகரிப்பு' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

உற்பத்தி திறன் மேம்பாட்டு அமைச்சும், வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகமும், இணைந்து இந்த விழிப்புணர்வு செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தன.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச் செயலமர்வில், வடமாகாணத்திலுள்ள திணைக்கள பணிப்பாளர்கள் மற்றும், செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழிப்புணர்வு செயலமர்வில், உற்பத்தித் திறன் அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க கலந்துகொண்டு, கருத்துத்தெரிவிக்கையில் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தியின் வீழ்ச்சி அதிகரித்திருந்துள்ளது. இந்த வீழ்ச்சியினை குறைப்பதற்கு உற்பத்தி திறன்களை வளர்ப்பதுடன், உற்பத்தி பொருட்கள், உற்பத்தி வீதங்களை அதிகரிப் பதற்கு அனைத்து அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியமெனக் கூறினார்.

(25)

# யாழ். சிறைக்கைதிகளுக்கு கஞ்சா விநியோகித்த இளம் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தங்கியிருக்கும் சிறைக்கைதிகளுக்கு கஞ்சா விநியோகித்து வந்த இளம் பெண் ஒருவர் பிடிக்கப்பட்டுள்ளார். கண்டிப்பகுதியினைச்சேர்ந்த இந்த இளம் பெண் பல தடவைகள் கஞ்சாப்பொதிகளை சிறைச்சாலைக்குள் எடுத்துச்சென்றிருக்கிறாரா என்ற தோரணையில் அவர் மீது இப்போது விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

யாழ்.சிறைச்சாலையில் கைதி ஒருவரை கடந்த திங்கள் பார்க்கச் சென்ற மேற்படி பெண் 4 கிராமும் 770 மில்லி கிராம் கஞ்சாவுடன் சிறைக் காப்பாளர்களினால் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கண்டிப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய குறித்த யுவதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை யாழ்.சிறைச்சாலைக்கு உறவினர் என்ற போர்வையில் ஒருவரை பார்க்கச் சென்றுள்ளார்.

அப்போது, அவர் கொண்டு சென்ற பொதியினை சிறைச்சாலை காப்பாளர்கள் பரிசோதனை மேற்கொண்ட போது, குறித்த யுவதியிடம் இருந்து 4 கிராமும், 770 மில்லி கிராம் கஞ்சா பொதியினை கைப்பற்றியுள்ளனர்.

கஞ்சா பொதியினையும், பிடிக்கப்பட்ட பெண்ணையும் யாழ்.சிறைச்சாலை காப்பாளர்கள் சிறைச்சாலை அத்தியட்சகரின் அனுமதியுடன் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த பெண்ணை யாழ். பொலிஸார் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(25)

### இரண்டு...

இவர் நேற்று முன்தினம் திங்கட கிழமை மாலை வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். இவரைக் காணவில்லை என கணவன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், சடலம் ஒன்று சாட்டி கடற்கரையில் இருப்பதாக மண்கும்பான் தபால் நிலைய தபாலதிபர் குறித்த நபரின் உறவினர்களுக்கு நேற்று தகவல் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி மற்றும் ஊர்காவற்துறை பொலிஸார் சாட்டி கடற்கரையில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி சடலத்தினை யாழ். போதனா வைததியசாலை பிரேத அறையில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட 2 பிள்ளைகளின் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டவர் என உறவினர்கள் தெரிவித்தனர். (25)

### ஜனாதிபதி...

கப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள புதிய மாவட்டச் செயலக மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நேற்றுக் காலை பத்து மணியளவில் இடம் பெற்றது. இதன் போது கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட மாவட்டத்தின் பல உ்யரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் புதிய மாவட்டச் செயலகத்தின் மூன்று மாடிகளைக் கொண்ட முதற்கட்டப் பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளன. (29)

### யானையுடன்...

இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவியுமான சாந்தா அபிமன்னசிங்கத்தின் சகோதரர் ஆவார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த ஏனைய மூவரும் மாங்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் வாகன சாரதியை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை அவரை 10,000 ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மரண விசாரணையை கிளிநெச்சி மாவட்ட நீதிபதி வகாப்தீன் நடாத்தி விசாரணை அறிக்கையினை அனுப்பிவைக் குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (25, 81, 170)

### யுத்தக்...

பெரும் எண்ணிக்கையிலான பலஸ்தீன சிறுவர் சிறுமியர், பெண்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட பலரும் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 67 ஆண்டுகளாக பலஸ்தீனத்தை முழு நாடாக அங்கீகரிக்காமை ஐக்கிய நாடுகள் அமைப்பின் தவறாகும் என குறிப்பிட்டுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் நடவடிக்கைகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை என தெரிவித்துள்ளது. குறிப்பாக இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு எதிராக அண்மையில் இலங்கை தவ்ஹீத் ஜமாத் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த போராட்டத்திற்கு பொதுபலசேனா அச்சுறுத்தல் விடுத்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேல் பயிற்சி அளித்து ஆயுதங்களை வழங்கியதனை பொதுபலசேனா மறந்துவிட்டு செயற்பட்டு வருவதாகவும் தேசிய சூரா பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

### 13ஆவது...

சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. இலங்கை அரசிடம் இதையே மத்திய அரசும் தொடர்ந்தும் வலியுறுத்தும். இந்த விடயத்தில் இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அதிகாரபூர்வமாக நிராகரிக்கவில்லை.

எனவே, இலங்கை அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படும் என நம்புகிறோம் என்றார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் எஸ்.டி.மூர்த்தி அங்குள்ள மக்களிடம், இந்தியாவில் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் உள்ள மக்கள், இந்தி மொழியை தொடர்பு மொழியாக பேச கற்றுக் கொண்டுள்ளனர். நீங்களும், சிங்கள மொழியை பேச கற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசியுள்ளமை குறித்து சையது அக்பருதீனிடம் கேட்டதற்கு, இது குறித்து இன்னும் எங்களுக்கு முழுமையான தகவல் கிடைக்கவில்லை. எனினும், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் துணைத் தூதர் எந்தக் கண்ணோட்டத்தில் அத்தகைய கருத்தை வெளியிட்டார் என்பது பற்றி விளக்கம் கேட்கப்படும் எனவும் தெரிவித்தார்.

### யுத்தத்திற்கு...

அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பு பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் பரஸ்பர விஜயங்களை ஊக்குவிக்கவும் பயிற்சி மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தொழில் நுட்பங்கள், அது தொடர்பான கற்கைநெறிகள் போன்றவற்றை பரிமாறவும் இரு நாடுகளும் இணங்கியுள்ளன. இரு தரப்பும் பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம் போன்றவற்றிக்கான தமது எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன. முன்னதாக 28 வருடங்களின் பின்னர் சீன ஜனாதிபதியொருவர் தமது பாரியாருடன் நேற்றுக் காலை 11.45 மணிக்கு டீ 2472 எயார் சைனா விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அங்கு அவருக்கு மகத்தான செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகளால் சீன ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

40 யானைகள் அணிவகுத்து நின்று சீன ஜனாதிபதிக்கு வரவேற்பளித்தன.

சீன ஜனாதிபதியை வரவேற்கும் வகையில் பல வித கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. விமான நிலைய வீதிகள் இருமருங்கிலும் சீன, இலங்கை கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

விசேட அதிதிகள் பதிவேட்டில் சீன ஜனாதிபதி கைச்சாத்திட்ட பின்னர் சீன தூதுக் குழுவினர் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஆகியோர் உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்கள் இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறறது.

இதன்போது இரு நாட்டு த்லைவர்களுக்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

சீனா மற்றும் இலங்கைக்கு இடையில் இருபதிற்கும் அதிகமான இரு தரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

இதையடுத்து, 1.34 பில்லியன் அமெரிக்க டொலர் சீன கடனுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இறுதிக் கட்டம் சீன ஜனாதிபதியினால் நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சீன ஜனாதிபதி ஜின்பின்ங் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கொழும்பு துறைமுக நகரின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்காக இன்றையதினம் கொழும்பு சர்வதேச கொள்கலன் களஞ்சிய தொகுதிக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

# திட்டமிட்டு மறைக்கப்படும் பொலிஸாரின் சித்திரவதைகள்

## வாழ்வதற்கான உரிமை அமைப்பு கவலை

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சித்திரவதைகள், துன்புறுத்தல் சம்பவங்கள் திட்டமிட்டு மறைக்கப்படுவதாக வாழ்வதற்கான உரிமை என்ற மனித உரிமை அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பொலிஸாருக்கு எதிராக நான்கு சித்திரவதை சம்பவங்கள் தொடர்பிலான வழக்குகளே பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பொலிஸார் சித்திரவதைகள் மேற்கொண்டதாக முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு 22ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய பொலிஸார் மேற்கொள்ளும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்.

சித்திரவதைச் சம்பவங்களுக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும், அவை தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டாம் தாரத்துடன் இணைந்து மனைவியின் கையை உடைத்த கணவன்

இரண்டாம் தாரத்துடன் சேர்ந்து முதல் தார மனைவியை அடித்து நொருக்கினார் கணவன். இதனால் நான்கு பிள்ளைகளின் தாயான மகேந்திரன் ஜெய்கௌரி (வயது-36) என்பவருக்கு கை எலும்பு முறிந்து துண்டாகியது.

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக குறித்த பெண்ணின் கணவனும் அவரது இரண்டாம் தார மனைவியும் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கினை விசாரித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த நபர் சாவகச்சேரியில் பிரபல உழுந்து வடை உற்பத்தியாளர் எனவும் இவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதால் நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள சிற்றுண்டி நிலையங்களில் உழுந்து வடை விற்பனைக்கு வரவில்லையெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.



## முதியவரின் வயிற்றிலிருந்து அகற்றப்பட்ட கற்பாறை

84 வயதான முதியவர் ஒருவரின் வயிற்றிலிருந்து முருகை கற்பாறை வடிவிலான கல் லொன்று சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சை, கிண்ணியா தள வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் ரொஹான் குமாரவினால் இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

முன்னீர்க்கும் சுரப்பியிலிருந்த 60 கிராம் நிறையுடைய கல்லே அகற்றப்பட்டுள்ளது. கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்துல் சமது என்பவரின் வயிற்றில் இருந்தே இக்கல் அகற்றப்பட்டுள்ளது. இவர், தற்போது அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்ட 'கல்' முருகை கற்பாறை வடிவில் இருப்பதனால், அக்கல்லை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

## பறவைக்கூடு கடத்தல் சிக்கினார் சீனப்பிரஜை

ஒருதொகை பறவைக் கூடுகளை நாட்டிலிருந்து கொண்டு செல்ல முயற்சித்த சீனப் பிரஜையொருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தேயிலைப் பெட்டிகளில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு இவை நாட்டிலிருந்து கொண்டுசெல்லப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

அவற்றின் பெறுமதி 19 இலட்சம் ரூபாவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிணையில் வந்தார் கமல்

(யாழ்ப்பாணம்)

பிணை வழங்கப்பட்டு இதுவரை காலமும் பிணையெடுப்பதற்கு ஆட்கள் இல்லாமல் இருந்த கமலேந்திரனை பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.லெனின்குமார் நேற்றைய தினம் அனுமதியளித்தார்.

இந்நிலையில், 2 இலட்சம் ரூபாய் காசுப்பிணை மற்றும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில், கமலேந்திரன் விடுவிக்கப்பட்ட நிலையில் வெளியேறினார். கமலேந்திரனின் உறவினர்களில் ஒருவரே அவரை பிணையில் எடுத்தார்.

கமலேந்திரனை பிணையில் செல்ல யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கர் கடந்த ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அனுமதி வழங்கினார்.

அத்துடன், வழக்கு முடிவடையும் வரையில் யாழ்ப்பாணத்தில் கமலேந்திரன் இருக்க முடியாது எனவும், வாரத்தில் ஒரு நாள், வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிபதி அறிவுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யோசனைகளை ஏற்காவிடின் அரசுடனான முரண் தொடரும்

### என்கிறார் விமல்

தமது கட்சியின் 12 யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படும் வரை தாம் அரசாங்கத்துடன் முரண்பாட்டை தொடர்ப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் பிரசாரம் ஒன்றில் உரையாற்றிய அவர், எமது கட்சியின் 12 யோசனைகளும் அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான யோசனைகளாகும்.

இந்த யோசனைகள் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்தநிலையில் எமது கட்சி மாத்திரமே அரசாங்கத்துக்குள் உள்ள பிரச்சினைகளை ஏற்படுத்தும் கட்சியாக உள்ளது.

அதாவது மக்களுக்காகவே இந்த பிரச்சினைகள் ஏற்படுத்தப் படுகின்றன என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

இதேவேளை தமது கட்சியின் யோசனைகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் கொள்கைகளில் உள்ளடக்கப்படும் என்று நம்புவதாக அமைச்சர் தெரிவித்தார்.

## தேநீர்ப்பை, பருத்தி நூலென கொண்டு வரப்பட்ட பாதணிகள், அழகுசாதனப் பொருட்கள் சுங்க அதிகாரிகளிடம் சிக்கின

சீனாவில் இருந்து கொள்கலன் மூலம் கொழும்பு தேயிலை நிறுவனத்துக்கு தேநீர்ப்பைக்கான பருத்தி நூல் என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட 20 மில்லியன் மதிக்கத்தக்க பாதணிகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

40 அடி நீளமான இந்த கொள்கலன் கடந்த 7ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



கொள்கலனை சோதனையிட்டபோது, அதிலுள்ள 2,400 கடதாசிப் பெட்டிகளிலிருந்து 5.4 மில்லியன் ரூபாய் பெறுமதியான 7 ஆயிரத்து 782 சோடி பாதணிகள், 82 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 82 ஆயிரத்து 300 இறப்பர் சூப்பிகள் (குழந்தைகளின் பால் போத்தலுக்கு போடப்படுவது) மற்றும் 12 மில்லியன் ரூபாய் பெறுமதியான அழகு சாதனப் பொருட்களை கைப்பற்றியதாக சுங்கத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஒப்பனை சாதனங்கள் மற்றும் மருந்துப்பொருள் அதிகாரசபையிடமிருந்து பெற்றிருக்கவில்லை.

இது தொடர்பான விசாரணைகளை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸாரின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு சந்தர்ப்பம்

### ஊவா தேர்தல் குறித்து கரு

பொலிஸாரின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது கடமையை உரிய முறையில் செய்து பொலிஸார் தமது கௌரவத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மிகவும் இழிவான முறையில் அரச பொறிமுறைமைகளைப் பயன்படுத்தி தீவிரமாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இலகு வெற்றியீட்ட எதிர்பார்த்த போதிலும் உண்மையில், கடுமையான சவாலை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கம் கடுமையாக தேர்தல் விதிகளை மீறிச் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் பொலிஸார் பக்கச் சார்பாகச் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் தேர்தல் எஞ்சிய தினங்களிலும், தேர்தல் தினத்திலும் பொலிஸாரின் கௌரவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் ஒரே இரவில் பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது என கரு ஜயசூரிய அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

## அபராதம் விதிப்பு

கொழும்பு - யாழ்ப்பாணம் சேவைக்கான வழித்தட அனுமதிப் பத்திரமின்றி சென்ற பேருந்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் ரூபா 15 ஆயிரம் அபராதம் விதித்தது. இந்தத் தகவலை கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் வந்த கொழும்பு பேருந்தினை கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சோதனையிட்டபோது வழித்தட அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பேருந்தின் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையின்போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ரூபா 15 ஆயிரம் தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## விவசாயக் கொள்கை அரசாங்கத்திடம் இல்லை

### பொதுபலசேனா குற்றச்சாட்டு

நாட்டில் விவசாய அமைச்சு ஒன்று காணப்படுகின்ற போதிலும். அரசாங்கத்திடம் விவசாயம் பற்றிய கொள்கைகள் எதுவும் கிடையாது என பொதுபல சேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அவ்வமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனிய நந்த தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சு இருந்த போதிலும் அதனை வழிநடத்துவது பல்தேசிய நிறுவனங்களாகும்.

விவசாயம் தொடர்பில் தேசியக் கொள்கை ஒன்றை அமுல்படுத்த அதிகாரிகள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் நாட்டில் விவசாயத்துறையும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.